விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஐப்பசி 16 வெள்ளிக்கிழமை (02.11.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 318




# மன்னாரிலும் முகமாலையிலும் நேற்று அதிகாலை உக்கிர மோதல்

(கொழும்பு)

மன்னாரிலும் முகமாலையிலும் நேற்று அதிகாலை இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே கடும் மோதல் இடம் பெற்றுள்ளது. எறிகணை வீச்சுக்கள், மோட்டார்த் தாக்குதல்கள் ஆகியவற்றுடன் நேரடியான துப்பாக்கிச் சமரும் இடம் பெற்றுள்ளன.விடுதலைப்புலிகளே இராணுவ முன்னரங்கப் பகுதிக்குள் ஊடுருவ முயன்றதாக இராணுவத்தினரும், இராணுவத்தினரே தமது பிரதேசத்திற்குள் முன்னேற முயன்றதாக விடுதலைப் புலிகளும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

## 26 இராணுவத்தினர் பலி-புலிகள்

(கிளிநொச்சி)

மன்னாரிலும் முகமாலையிலும் நேற்று அதிகாலை முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் கடும் மோதல் இடம் பெற்றுள்ளது. இம்மோதல்களில் 26 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். மன்னார் மோதலில் 25 இராணுவத்தினரும் முகமாலை மோதலில் ஒரு இராணுவச் சிப்பாயும் உயிரிழந்ததாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## 30 புலிகள் பலி- இராணுவம்

(கொழும்பு)

மன்னார் கட்டுக்கரைக் குளத்தில் இடம் பெற்ற மோதல் சம்பவங்களில் 22 விடுதலைப்புலிகளும் இரண்டு இராணுவத்தினரும் உயிரிழந்துள்ளதுடன், 12 இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளதாகவும் பாதுகாப்புக்கான ஊடக தகவல் மையம் தெரிவித்துள்ளது. முகமாலையில் இடம் பெற்ற மோதலில் எட்டு விடுதலைப்புலிகள் உயிரிழந்ததுடன் ஐந்து இராணுவத்தினர் காயமடைந்ததாக பாதுகாப்பு ஊடக தகவல் மையம் தெரிவித்துள்ளது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வேலையற்ற பட்டதாரிகள் மீது கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதல்

(கொழும்பு)

தலைநகர் கொழும்பில் வேலையற்ற பட்டதாரிகள் நேற்று பிற்பகல் நடத்திய ஆர்ப்பாட்டத்தை கண்ணீர்ப்புகைக்குண்டு வீசியும் அழுக்கு நீரை விசிறியும் பொலிஸார் நடத்திய தாக்குதலால் பெரும் பதற்றம் நிலவியது. பொலிஸாரின் தாக்குதல்களை எதிர்த்து நின்ற பட்டதாரிகள் தம்மை அண்மித்த பொலிஸார்

இதனால் அப்பகுதி பெரும் களேபரமாக காட்சியளித்தது. இந்த ஆர்ப்பாட்டம் நேற்று பிற்பகல் 12.30 மணிக்கு நடைபெற்றது. கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து தொடங்கிய இந்த ஆர்ப்பாட்ட பேரணி நிதி அமைச்சை நோக்கி நகர முற்பட்டபோது அவர்கள் மீது கண்ணீர்ப்புகைக்குண்டு தாக்குதல்களையும் தடியடியையும் பொலிஸார்

## புனர்வாழ்வு நிலையம் அமைக்க 80 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

### அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

சரணடைவோர் மற்றும் இராணுவத்தினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுவோரை தங்கவைப்பதற்கான புனர்வாழ்வு நிலையங்களை வடக்கில் அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஒதுக்கவும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் முன் வைக்கப்பட்ட இப்பிரேரணைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(கொழும்பு)

தலைநகர் கொழும்பில் வேலையற்ற பட்டதாரிகள் நேற்று பிற்பகல் நடத்திய ஆர்ப்பாட்டத்தை கண்ணீர்ப்புகைக்குண்டு வீசியும் அழுக்கு நீரை விசிறியும் பொலிஸார் நடத்திய தாக்குதலால் பெரும் பதற்றம் நிலவியது. பொலிஸாரின் தாக்குதல்களை எதிர்த்து நின்ற பட்டதாரிகள் தம்மை அண்மித்த பொலிஸார் மீது லேக் ஹவுஸ் சுற்றுவட்டப் பகுதியில் இருந்து தாக்குதல் நடத்தினர்.

இதனால் அப்பகுதி பெரும் களேபரமாக காட்சியளித்தது. இந்த ஆர்ப்பாட்டம் நேற்று பிற்பகல் 12.30 மணிக்கு நடைபெற்றது. கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து தொடங்கிய இந்த ஆர்ப்பாட்ட பேரணி நிதி அமைச்சை நோக்கி நகர முற்பட்டபோது அவர்கள் மீது கண்ணீர்ப்புகைக்குண்டு தாக்குதல்களையும் தடியடியையும் பொலிஸார் நடத்தினர்.

பொலிஸாரின் (08 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

சரணடைவோர் மற்றும் இராணுவத்தினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுவோரை தங்கவைப்பதற்கான புனர்வாழ்வு நிலையங்களை வடக்கில் அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அத்துடன் புனர்வாழ்வு நிலையத்தை அமைப்பதற்கு 80 மில்லியன் ரூபாவை ஒதுக்கவும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் முன் வைக்கப்பட்ட இப்பிரேரணைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

புனர்வாழ்வு நிலையங்களை அமைப்பதற்கு யாழ்.நீதிமன்ற பழைய கட்டடங்களை பயன்படுத்திக் கொள்ளவும், பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு சிறைச்சாலை அதிகாரிகளின் சேவைகளை பெற்றுக்கொள்ளவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை சீனாவிலிருந்து மா இறக்குமதி செய்வதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியது. இதற்கான பிரேரணையை வர்த்தக சந்தை அபிவிருத்தி கூட்டுறவு மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன முன்வைத்திருந்தார். (ச-5)

# ஊடகங்கள் பொறுப்புடன் செயற்படுவதால் செய்தித் தணிக்கைச் சட்டம் நீக்கப்பட்டது

## அமைச்சர் பிரியதர்சன யாப்பா அறிவிப்பு

(கொழும்பு)

ஊடகங்கள் இப்போது பொறுப்புணர்வுடன் நடந்து கொள்வதன் காரணமாக இராணுவ நடவடிக்கைகள் தொடர்பான செய்திகளை வெளியிடுவதற்கு கொண்டுவரப்பட்ட தணிக்கைச் சட்டம் நீக்கப்பட்டதாக அமைச்சரவைப் பேச்சாளர் அநுரபிரியதர்சன யாப்பா தெரிவித்தார். அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று பிற்பகல் அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இங்கு ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அமைச்சர் மேலும் கூறியதாவது; இராணுவ நடவடிக்கைகள் தொடர்பான செய்திகளை சில ஊடகங்கள் பிழையாக வெளியிட்டதன் காரணமாக இனங்களுக்கு இடையில் மோதல்கள் ஏற்பட்டு நாட்டில் (08 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...
குருப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

Now Available !

G.C.E(O/L) - ICT பாடத்திற்கான நூல்




க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்குரிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) பாடத்திற்காக ஆசிரியர் கே.ஆர்.சுகுமார் அவர்களினால் மூன்று பகுதிகளாக தமிழ் மொழியில் எழுதப்பட்ட நூல்களைப் பெற்றுக்கொள்ள தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் :

021-4590291, 0779184530

Now Available !

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கடந்த ஒன்றரை வருட காலத்தில் ஊடகவியலாளர் 11 பேர் படுகொலை

## ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி

(கொழும்பு)

இலங்கை அரசாங்கமானது ஊடகங்களை ஒடுக்கி வருகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சி சாடியுள்ளது. கொழும்பில் அக்கட்சியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று முன்தினம் புதன்கிழமை ஊடகவியலாளர்களிடம் கூறியதாவது,

இலங்கையில் கடந்த ஒன்றரை வருட காலத்தில் 11 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஊடக சுதந்திரம் என்பது அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது.

ஊடக சுதந்திரத்தை கண்மூடித்தனமாக அரசாங்கம் ஒடுக்கி வருகிறது. ஏ.பி.சி நிறுவனத்தின் உரிமைப் பத்திரத்தை இரத்துச் செய்த பின்னர், ஈதளயா இணைய ஆசிரியர் குமுது சம்பிக்க ஜயவர்த்தன மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமானது ஊடகங்களுக்கு எதிரான அரசாங்கத்தின் அராஜகப் போக்கை வெளிப்படுத்துகிறது.

உண்மையிலேயே அரசாங்கத் தொலைக்காட்சி, பண்பலை ஒலிபரப்புக்கள் மற்றும் லேக்ஹவுஸ் நாளிதழ்கள் தான் மக்களை தவறாக வழிநடத்துகின்றன. அரசாங்க. ஊடகங்களின் பிடியில் இருந்து மக்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்றார் அவர். (அ-5)



லயன்ஸ் கழக 306 B 1 வலய ஆளுநரும் கொமர்ஷல் வங்கியினுடைய ஏற்றுமதிப் பிரிவின் தலைவருமாகிய லயன் எஸ்.இராகவனின் அண்மைய யாழ்ப்பாண வருகையை முன்னிட்டு யாழ்.குடாநாட்டிலுள்ள கொமர்ஷல் வங்கி கிளைகளின் ஊழியர்களாலும் விளையாட்டுக் கழகத்தாலும் நன்கொடையாக வழங்கப்பட்ட 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை, லயன் எஸ்.இராகவன் இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த இளவாலை சென் .ஹென்றிஸ் மாணவனுடைய மருத்துவத் தேவைக்காக பாடசாலையின் முதல்வரிடம் கையளிப்பதை படத்தில் காணலாம். அருகில் யாழ்.கிளையின் முகாமையாளர் லயன் எஸ்.இரவீந்திரா மற்றும் ஊழியர்கள் காணப்படுகின்றனர்.

# சந்திரிகா லண்டன் பயணம்

(கொழும்பு)

மாநாடுகளிலும் கருத்தரங்குகளிலும் கலந்துகொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க லண்டனுக்கு பயணமாகியுள்ளார்.

சர்வதேச நிறுவனங்களின் அழைப்பை ஏற்றே அவர் லண்டனுக்கு பயணமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இம்மாதம் மெக்ஸிக்கோ, நியூயோர்க், ஹங்கேரி நாடுகளில் இடம்பெறவுள்ள சமாதானம் மற்றும் ஜனநாயக பரிமாற்றங்கள் என்ற தலைப்பில் அந்நாடுகளில் இடம்பெறும் மாநாடுகளில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றவுள்ளார்.

இம்மாநாடுகளில் கலந்துகொண்டு விட்டு டிசம்பர் மாத இறுதியில் இலங்கை திரும்பும் முன்னாள் ஜனாதிபதி தனது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பாரென்றும் அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தல அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-5)

# யாழில் சமையல் எரிவாயு விற்பனை தற்காலிகமாக இடைநிறுத்தம்

யாழ்.மாவட்டத்திற்கு சமையல் எரிவாயுவினைக் கப்பல் மூலம் கொண்டு வந்து விற்பனை செய்யும் நிறுவனங்களுடன் அதன் விற்பனை விலை தொடர்பாக நேற்று மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டது. இது அத்தியாவசியப் பொருள் என அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டதாகும்.

எனினும் இதனை மிக அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்படுவதனால் இதன் விற்பனை விலையை மீள் பரிசீலனை செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இதனால் எக்காரணம் கொண்டும் அதனை மறு அறிவித்தல்வரை சகல சமையல் எரிவாயு விற்பனையாளர்களாலும் விற்பனை செய்வது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனை மீறும் வர்த்தகர்களுக்கு எதிராக பாவனையாளர் அதிகார சபையினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ச-5)

# நினைவுத் திருப்பலி

திருமறைக் கலாமன்றத்தின் அங்கத்தவர்களாக இருந்து அமரர்களானவர்களை நினைவு கூரும் திருப்பலி நாளை மாலை 3.30 மணிக்கு நெய்தலம் இணைப்பாளர் அருட்தந்தை அ.பி.ஜெயசேகரம் தலைமையில் கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது. (ச-4)

# கைவிரல் ரேகை அடையாளம் கொண்ட புதிய தேசிய அடையாள அட்டைகள்

## அடுத்த வருடம் முதல் விநியோகம்

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டை மோசடிகளை ஒழிக்கும் நோக்கும் கைவிரல் ரேகை அடையாளங் கொண்ட புதிய தேசிய அடையாள அட்டைகள் அடுத்த வருட இறுதிக்குள் நாடு முழுவதிலும் விநியோகிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் எல்.ஜி.தர்மதாச தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கூறியதாவது, 16 வயது பூர்த்தியடைந்த சகலருக்கும் அடுத்த வருடம் முதல் தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்படும். மோசடிகளை தவிர்க்கும் நோக்குடன் கைப்பெருவிரல் ரேகை பதியப்பட்டு கணனிகள் மூலம் புதிய அடையாள அட்டைகள் உருவாக்கப்படும்.

பத்து வருடங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும் புதிய அடையாள அட்டைகள் மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்படும் தொழில் விபரங்கள் அதில் குறிப்பிடப்படமாட்டாது.

புதிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் பிரதேச செயலகங்களினூடாக விநியோகிக்கப்படும். விண்ணப்பங்களை பரிசீலிப்பது முதல் அடையாள அட்டைகளை விநியோகிக்கும் வரையான சகல நடவடிக்கைகளும் கணனிகள் மூலமே மேற்கொள்ளப்படும் என்றும் ஆணையாளர் மேலும் கூறினார். (ச-5)

# யாழ்.லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் ஆஸ்த்மா நோய் பற்றிய கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.லயன்ஸ் கழக பங்களிப்பில் எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் ஆஸ்த்மா நோய் பற்றிய விளக்கக் கருத்தரங்கு நடைபெறும்.

சமூதாய மருத்துவத்துறை மாணவர்களால் முன்னெடுக்கப்படும் இந்நிகழ்வில் அனைத்து நோயாளர்களும், ஆர்வலர்களும் கலந்து பயனைப் பெறலாம்.

இந்நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலை பிரபல வைத்திய நிபுணர்கள் கலந்து நோயின் அறிகுறி,மகத்துவம், பரிகாரம், என்பன பொதுமக்களுக்கு விளக்கமளிக்கப்படும்.

நிகழ்வு குறித்த நேரத்திற்கு ஆரம்பமாகும். எனவே சகல யாழ்.லயன்ஸ் கழக உறுப்பினர்களையும் சகோதர கழக உறுப்பினர்களையும் கலந்து பயன் பெற்று சிறப்பிக்குமாறு யாழ்.லயன்ஸ் கழகத் தலைவர் ப.செந்தில்செல்வன் கேட்டுள்ளார். (ச)



யாழ்.பல்கலைக்கழக நூலகத்தில் நீண்ட காலமாக கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் க.தருமகுலசிங்கத்திற்கு நூலக அலுவலர் கழகத்தால் நடத்தப்பட்ட பிரிவுபசார விழாவின் போது நூலக உதவிப் பதிவாளர் க.சின்னராசா அன்பளிப்பு வழங்கிக் கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

# சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு யாழ்.மாணவர்களிடையே கட்டுரைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே கட்டுரைப்போட்டி ஒன்றை நடாத்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் தீர்மானித்துள்ளது.

கீழ்பிரிவில் 6,7,8 ஆம் வகுப்புக்களை கொண்டு 'சிறுவர் உரிமைகளும் கடமைகளும்' என்ற தலைப்பில் 150 சொற்களுக்கு உட்பட்டதாகவும், மத்திய பிரிவிலுள்ள 9,10,11 வகுப்புக்களை கொண்டு 'சர்வதேச மனித உரிமைகள் தினம்' என்ற தலைப்பில் 200 சொற்களுக்கு உட்பட்டதாகவும் மேற்பிரிவில் உயர்தர வகுப்புகளை கொண்டு 'மனித உரிமைகளும் யாழ்.மாவட்ட மக்களும்' என்ற தலைப்பில் 250 சொற்களுக்கு உட்பட்டதாகவும் அமைய வேண்டும் என மனித உரிமைகள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

இதன்படி போட்டிகளை 19.11.2007 இதற்கு முன்னதாக நடாத்தி முடித்து ஒவ்வொரு வலயத்திலும் இருந்து ஒவ்வொரு பிரிவிலும் முதல் 3 இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்களையும் அவர்களது ஆக்கங்களையும் தமது யாழ்.அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

5 வலயங்களிலும் இருந்து தெரிவு செய்யப்படும் 3 பிரிவுகளையும் சேர்ந்த 45 மாணவர்களுக்கும் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் இறுதிப் போட்டி நடாத்தப்பட்டு சர்வதேச மனித உரிமைகள் தினமான டிசம்பர் 10ஆம் திகதி அவர்களுக்கான சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படவுள்ளது. (ச-4)

# துப்பாக்கி வெடித்ததில் மாணவன் உயிரிழப்பு

கந்தளாய் கோமரங்கடவெல பகுதியில் நேற்று முன்தினம் மாலை துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் 15 வயது மாணவர் ஒருவர் மரணமாகியுள்ளார். இப்பகுதியில் கடமையாற்றி வரும் ஊர்காவற்படைவீரர் ஒருவரின் சகோதரியின் மகனே இவ்வாறு மரணமாகியுள்ளார் என கோமரங்கடவெல பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியை எடுத்த மாணவர் அதனை பரிசோதித்துக் கொண்டிருக்கையில் அது வெடித்ததாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். சம்பவத்தில் படுகாயமடைந்த சிறுவன் கோமரங்கட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி மரணமாகினார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-5)

# வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்ட பயனாளிகளுக்கு சீமெந்து விநியோகம்

வடக்கு கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் கட்டம்-II இனை நடைமுறைப்படுத்துவதற்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு, தங்களது வீடுகளை புனர்நிர்மாணம் செய்வதற்காகக் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட சீமெந்துகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார்.

மேற்படி திட்டத்தின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட சீமெந்தினைத் தங்களது வீட்டு நிர்மாண தேவைகளுக்கு மாத்திரமே உபயோகிக்க வேண்டும் எனவும்,வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவதோ அல்லது இரவல் வழங்குவதோ அல்லது விற்பனை செய்வதற்கோ எக்காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாது என்பதனை மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் எனது அறிவுறுத்தல்களுக்கு அமைவாகச் செயல்படாத பயனாளிகளுக்கு எதிராக அவர்களை இத்திட்டத்திலிருந்து நீக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன் என அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# பெறுபேறுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சகல பீடங்களுக்குமான மீள் பரீட்சை முடிபுகள் கடந்த திங்கட்கிழமை வெளியாகியுள்ளது.

அந்தந்த பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள் தத்தமது பீடங்களில் உள்ள விளம்பரப் பலகையில் பெறுபேறுகளை பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-4)

# இன்று ஒரு தகவல்

## அன்னரச அமிர்த சஞ்சீவி

"அன்னரச அமிர்த சஞ்சீவி" என்றால் என்னவென்று தெரியுமா? நானும் சில நாட்களுக்கு முன்னால் தான் அதைப்பற்றி அறிந்து கொண்டேன். கிராமத்திலே ஒரு பழைய காலத்து வீட்டிலே இருந்த அலுமாரியைத் துப்பரவு செய்தபோது கிடைத்ததாகப் பழைய புத்தக மொன்றை ஒரு பெரியவர் என்னிடம் தந்தார்.

மிகப் பழைய புத்தகம். 904 பக்கம். விலை 3ரூபா 12 அணா என்று போட்டிருந்தது. 68 வருடங்களுக்கு முன் வெளியான புத்தகம் 20.5.1925 இல் எட்டாம் பதிப்பு வெளி வந்திருக்கிறது. புத்தகத்தின் பெயர் என்ன தெரியுமா? "ஜீவப் பிரம்மைக்கிய வேதாந்த ரஹஸ்யம்" அதன் முதற் பக்கத்திலே "இது வெட்டவெளி பரம்பரையிலே வந்த ஸ்ரீ நித்யாநந்த சுவாமிகளின் பிரிய சீஷ்யராகிய கடப்பை ஸ்ரீ பரமஹம்ஸ சச்சிதானந்த யோகீஸ்வரர் அவர்களால் இயற்றி சென்னை சூளை "ஸ்ரீ பாரதி" அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளது. அந்தப் புகத்தகத்தைப் புரட்டிப் பார்த்த போதுதான் "அன்னரச அமிர்த சஞ்சீவி" என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

அன்னரசம் என்றால் என்ன? அன்னம் என்றால் சோறு ரசம் என்றால் சாறு அன்ன ரசம் என்றால் நீராகாரம்-பழைய சோற்றுத் தண்ணீர்! அந்த அளவுக்கு இதிலே விஷயம் இருக்கிறதா என்று நீங்கள் கேட்கலாம். இருக் கிறது அதுதான் இன்றைக்குத் தகவல்.

"பழைய சாதமும் அதன் நீரும் சாப்பிட்டு வந்தால் அவர்களுக்கு மலச்சிக்கல் இல்லாமலும் சரீரத்துக்கு எவ்வித வியாதிகளும் வராமலும் எப்பொழுதும் சுகமாக இருப்பார்கள் என்று அந்தப் புத்தகத்திலே எழுதப்பட்டிருக்கிறது. பழைய சாதம் எப்படி தயார் செய்வது என்ற விபரம் அதில் இருக்கிறது. இது என்ன பெரிய விஷயம்? இராத்திரி மீதப்பட்ட சோற்றிலே தண்ணீர் ஊற்றி வைத்தால் மறுநாள் காலை அது பழைய சோறு என்று சொல்லத் தோன்றுகிறதா? அப்படியில்லை. இதிலே சில நுணுக்கங்கள் சொல்லியிருக்கிறார்கள்.

குக்கரிலே சாதம் தயார் பண்ணும் காலம் இது. அந்தக் காலத்திலே அப்படியில்லை. இராத்திரியிலே சாதம் வடித்தபின் ஒரு பாத்திரத்திலே சுத்தமான தண்ணீரை விட்டுக் கொதிக்க வைக்க வேண்டும். சாதம் வடித்த கஞ்சி மேல் படிந்திருக்கும் ஆடையை எடுத்துவிட்டு இரண்டு பங்கு கஞ்சி, ஒரு பங்கு கொதிக்க வைத்து ஆறிய தண்ணீர் இரண்டையும் ஒரு பாத்திரத்திலே கலந்து வைத்துக் கொள்ள வேண்டும். இரவு எல்லாரும் சாப்பிட்டபின் மிகுதியாக இருக்கிற சாதத்திலே இதை ஊற்றி மூடிவைத்து விட வேண்டும். காலையில் ஒரு கிண்ணத்தில் இந்தச் சாதத்தைப் போட்டு அதற்கு மேல் இரண்டு அங்குல உயரத்துக்கு வருகிற மாதிரி அந்தத் தண்ணீரையும் ஊற்றிக் கொள்ள வேண்டும். கொஞ்சம் கரிக்கிற மாதிரி உப்பைப் போட்டு ஊறுகாயுடன் சாப்பிட வேண்டும். மிகுதியாக இருக்கும் தண்ணீரையும் குடிக்க வேண்டும். மழைகாலம் குளிர் காலம் பற்றிக் கவலைப்படாமல் ஆயுள் பூராவும் இதைச் சாப்பிட்டு வரலாமாம்! இப்படிச் சாப்பிட்டு வந்தால் எந்தக் காலத்திலும் எந்த வியாதியும் வ்ராது என்று உத்தரவாதம் கொடுக்கிறார் அந்த மகான்.

இது தவிர, இன்னொரு வைத்தியமும் உண்டு. குடல் சுத்தமாக வேண்டுமா? இரண்டு டம்ளர் நீராகாரத்தில் கொஞ் சம் கூடுதலாக கரிக்கிற அளவுக்கு உப்பைப் போட்டு காலையிலே வெறும் வயிற்றில் சாப்பிட்டு உடனே வெற்றிலை போட்டு விழுங்கினால் போதும். வயிறு கிளீன்! அந்தப் பழைய சாதத்திலே தயிர், மோர் விட்டுச் சாப்பிடக் கூடாதாம். கொட்டாவி, தூக்கம், மந்தபுத்தி எல்லாம் வந்து விடுமாம். இதுவரை சொன்ன விபரம் எல்லாம் ஒரு மகான் அனுபவத்திலே கண்டறிந்து நமக்கு சொல்லியிருக்கிற விஷயங்கள். இது "கை கண்ட அன்னரச அமிர்த சஞ்சீவி ஒளஷதமென்று அறியக்கட வீர்களாக!" என்று அவர் எழுதியிருக்கிறார்.

அதை உங்கள் காதிலேயும் போட்டு வைத்துவிட்டேன். உங்கள் வீட்டிலே இருக்கிற மற்றவர்கள் காதிலேயும் இது விழுந்திருக்கும். நாளை காலையிலிருந்து உங்கள் வீட்டிலே காலை ஆகாரம் வித்தியாசமாக இருந்தால் அதற்காக என்னைத் தேடிக் கொண்டு சண்டைக்கு வந்து விடாதீர்கள். உன்னாலே தான் எனக்கு இந்தக் கதி ஏற்பட்ட தென்று!

இதிலே மறைமுகமாக நான் உங்களுக்கு ஒரு உதவியும் செய்திருக்கிறேன். உங்கள் வீட்டிலே இதுதான் காலை உணவு என்று தெரிந்தால் உங்கள் வீட்டுக்கு விருந்தாளிகள் யாருமே வரமாட்டார்கள். இதை நினைத்தாவது நீங்கள் எனக்கு நன்றி தெரிவிக்கவேண்டும்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# அரச ஊழியர்கள் மக்கள் தேவையறிந்து அவற்றை பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்

## அரச அதிபர் க.கணேஸ்

உயர் பதவிகளில் உள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள் மக்களுடைய தேவைகள் எதிர்பார்ப்புக்களை இனங்கண்டு அவற்றினைப் பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றைய காலத்தின் தேவை இதுவாகும். அரச உத்தியோகத்தர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, சேவை மனப்பான்மை, அர்ப்பணிப்புக்களுடன் செயலாற்ற வேண்டும். இவ்வாறான உத்தியோகத்தர்கள் சமூகத்தில் உயர்ந்தஸ்தானத்தில் வைத்துக் கௌரவிக்கப்படுவர்.

இவ்வாறு திக்கம் மத்திய சனசமூக நிலைய பரிசளிப்பு விழாவிலும் ஓய்வுபெற்ற மன்னார் அரச அதிபர் வி.விஸ்வலிங்கத்தின் சேவை நலன் பாராட்டுவிழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்ப்பாண அரசாங்க அதிபர் க.கணேஸ் குறிப்பிட்டார்.

இவ்விழா சனசமூக நிலையத்தலைவர் வி.திருக்குமரன் (ஆசிரியர்) தலைமையில் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. யாழ்ப்பாண அரசாங்க அதிபர் கணேஸ் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது,

மக்களின் தேவைகளை இனங்கண்டு அவற்றினைச் சிறப்பாகப் பூர்த்திசெய்யும் அரச உத்தியோகத்தர்கள் பாராட் டிக் கௌரவிக்கப்படவேண்டும். அவர்கள் இளைப்பாறிச் சென்றபின் அவர்களுக்கு மக்களால் நடாத்தப்படும் சேவை நலன்பாராட்டுவிழாக்கள் அவரது சேவையின் மகத்துவங்களை எடுத்துக்கூறும்.

ஓய்வுபெற்ற அரச அதிபர் விஸ்வலிங்கம் மக்களுக்குச் சிறந்த சேவையாற்றியவர். இதனால் அவருக்கு சமூகத்தில் உயர்ந்த நன்மதிப்புண்டு சிறு வயதிலிருந்து அவருடன் நான் பழகியுள்ளேன். முக்கியமாக பொலிகை கந்தவன ஆலயத்திருவிழாவிடயங்களில் நெருக்கி பழகி செயற்பட்டுள்ளேன். அவர் இறை பக்தியிலும் முன்னணியில் திகழ்பவர்.

நான் வவுனியா அரச அதிபராகப் பணியாற்றியபோது அவர் மன்னார் அரச அதிபராகப் பணியாற்றினார். எமது செயற்பாடுகளின் போது மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய நான்கு மாவட்ட அரச அதிபர்களும் இணைந்து மக்களின் தேவைகளை இனங்கண்டு பூர்த்தி செய்துள்ளோம். எனவே அவருக் கும் எனக்கும் பல்வேறு துறைகளிலும் மிக நெருங்கிய தொடர்புண்டு. இவரை திக்கம் மத்திய சன சமூக நிலையம் பாராட்டிக் கௌரவிப்பது மிக மகழ்ச்சிக்குரியதாகும்.

திக்கம் மத்திய சனசமூக நிலையம் இக் கிராம அபிவிருத்தியிலும், இக் கிராம மக்களின் தேவைகளை இனங்கண்டு அவற்றினைப் பூர்த்தி செய்வதில் முன்னணியில் திகழ்கின்றது. இது ஏனைய சனசமூக நிலையங்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். பொது சேவைகளில் ஈடுபடுவோர் சேவை மனப்பான்மையுடனும் அன்புடனும் செயற்பட வேண்டும்! விடா முயற்சி, துணிவு, அர்ப்பணிப்பு அவர்களின் அணிகலன்களாகத் திகழ வேண்டும். இப்பகுதிகளின் பல் வேறு அபிவிருத்தி மேம்பாடுகளிலும் இச் சன சமூக நிலையம் தொடர்ந்தும் சிறப்பாகச் செயற்பட்டு மக்களுக்கு உதவ வேண்டும். இது போன்ற சேவை நிறுவனங்களுக்கு பல்வேறு வகைகளிலும் உதவிகளை வழங்குவ தோடு போதிய ஒத்துழைப் புக்களையும் கிராமிய மக்கள் வழங்க வேண்டும். இதன் மூலம் இக் கிராமம் பல்வேறு துறைகளிலும் சுபீட்சம் பெறமுடியும்.

யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி சாந்தகுமாரி மகேந்திரன், யாழ்.மாநகர ஆணையாளர் எஸ்.சரவணபவா, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் எஸ்.பசுபதி, பொலிகண்டி கந்தவன ஆலய ஆதீனகர்த்தா செல்வி யோகாம்பிகை திக்கம்செல்லையாபிள்ளை, திக்கம் நலன்புரிச் சங்க கனடா இணைப்பாளர் திருமதி யோகேஸ்வரி சபேஸ்குமார் ஆகியோரும் இவ்விழாவிலே விருந்தினர்களாகக் கலந்துரையாற்றினர். திரு.விஸ்வலிங்கம் ஏற்புரை நிகழ்த்தினார்.

அமரர் வாரித்தம்பி தங்கராஜா நிதியப் பரிசில்கள் வழங்கப்பட்டன. திக்கம் கிராமத்தைச் சேர்ந்த 72 மாணவர்கள் பரிசில்களைப் பெற்றுக்கொண்டனர். சனசமூக நிலையச் செயலாளர் எஸ்.சாந்தரூபன் நன்றியுரை வழங்கினார். (அ-52)

# செஞ்சிலுவைச் சங்க பரப்புரைக் கூட்டம்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையினரால் நடத்தப்பட்டு வரும் செஞ்சிலுவை தொடர்பான பரப்புரைக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பி.ப.1 மணிக்கு உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கிளையின் தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் தலைமையிலான குழு பரப்புரை நிகழ்த்தவுள்ளது. எட்டாம் ஆண்டுக்கு மேற்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர். எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-134)

# வழக்கை விசாரிக்குமாறு மனுத்தாக்கல்

சிங்கப்பூரிலிருந்து கொழும்பு வந்தபோது கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள குணசுந்தரம் ஜயசுந்தரம் என்பவர் தனது வழக்கை விசாரணைக்கு எடுக்குமாறு மனுத்தாக்கல் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அயர்லாந்துப்பிரஜையான இவர் கடந்த செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி சிங்கப்பூரிலிருந்து வர்த்தக விடயமாக கொழும்பு வந்தபோது கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இதுவரை இவரது வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட வில்லை எனவும் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் செயலாளர், சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (அ-5)

# இராசிபலன்

02.11.2007

(ஐப்பசி 16, வெள்ளிக்கிழமை)

அட்டமி முன்னிரவு 08.49 மணிவரை

பூசம் முற்பகல் 11.57 மணிவரை

இராகுகாலம் 10.34-12.04 மணிவரை

சுபநேரம் 06.04-07.34 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தாய்வழி உறவு, புதிய விடயம், அற்பர் உறவு, சுபசெலவு. |
| இடபம் | இனிய அனுபவம், தெய்வதரிசனம், வாக்கு மேன்மை, பிரயாண நன்மை. |
| மிதுனம் | மாதர்நட்பு, காரியதாமதம், பொருள் விரயம், கடின வார்த்தை. |
| கடகம் | தெய்வசிந்தை, நண்பர்கள் உதவி, சயனசுகம், போசன சுகம். |
| சிங்கம் | உணர்ச்சி வசப்படல், முயற்சி தாமதம், திடீர் நன்மை, தெய்வ சிந்தை. |
| கன்னி | தொழில் நன்மை, உற்சாகம், தெய்வ தரிசனம், பொருள் சேர்க்கை. |
| துலாம் | உஷ்ண நிலை, அதிகாரம், பிறர் உதவி, முயற்சி கைக்கூடும். |
| விருச்சிகம் | உடல்உழைப்பு, வீண்பயம், பித்த ரோகம், திடீர் பயணம். |
| தனுசு | வாகனபயம், ஆரோக்கியக் குறைவு, உறவினர் மனஸ்தாபம், கடின முயற்சி. |
| மகரம் | தெய்வதரிசனம், களஸ்திர நன்மை, நல்ல வரவேற்பு, பொருள் சேர்க்கை. |
| கும்பம் | சத்துரு ஜெயம், நல்ல முயற்சி, சுக வாழ்வு, தெய்வசிந்தை. |
| மீனம் | காரிய இடையூறு, புத்திரரால் கவலை, பணக்குறைவு, தாழ்ந்த சுபாவம். |

வளவன்

# திக்கம் மத்திய சனசமூக நிலையத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் நிதி ஒதுக்கீடு

(பருத்தித்துறை)

பருத்தத்துறை திக்கம் மத்திய சன சமூகநிலைய நூலகத்திற்கு 1 இலட்சம் ரூபாவுக்கு நூல்களை கொள்வனவு செய்யப்படவுள்ளன. யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா பன்முகப்படுத்தப்பட்ட வரவு -செலவுத் திட்டத்தின் கீழ் இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்து வழங்கியுள்ளார்.

இச்சனசமூக நிலைய முன்பள்ளிக்குச் சுமார் 1 இலட்சம் ரூபா செலவில் மின்னிணைப்பு ஏற்படுத்தப்படவுள்ளது. இதற்கான நிதியை யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் கஜேந்திரகுமார். பொன்னம்பலம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்து வழங்கியுள்ளார்.

இச் சனசமூக நிலைய அபிவிருத்திக்கென யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கமும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்திலிருந்து ஒரு இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்து வழங்கியிருக்கிறார். (அ-52)



சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி வார இறுதி நாள் விழாவை சாவகச்சேரி மக்கள் வங்கிமுகாமையாளர் எஸ்.சிவபாலன் மங்கள விளக்கேற்றி ஆரம்பிப்பதையும் யாழ்.உள்ளூராட்சி உதவி ஆரணயாளர் திருமதி எஸ்.வசந்த குமார், நகரசபைச் செயலாளர் திருமதி கே.ஆறுமுகம், யாழ்.மாநகரசபை ஆணையாளர் எம். எஸ்.சரவணபவ ஆகியோர் நிற்பதையும், 25வருட அரச சேவையைப் பூர்த்தி செய்த சிறாப்பர் கே.இராமச்சந்திரனுக்கு நூலகர்.எஸ்.பாலசுப்பிரமணியம் மாலை யணிவித்துக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

# கலிபோர்னியா காட்டுத்தீக்கு சிறுவன் காரணம்?


(லாஸ் ஏஞ்சல்ஸ்)

அமெரிக்காவில் கலிபோர்னியாவில் ஏற்பட்ட காட்டுத்தீக்கு நான்தான் காரணம் என்று ஒரு சிறுவன் ஒப்புக்கொண்டு இருக்கிறான். அவன் பெயர் வெளியிடப்படவில்லை அவன் நகர ஷெரீப்பிடம் தீக்குச்சிகளை வைத்துக் கொண்டு விளையாடியதில் இந்த விபத்து ஏற்பட்டது என்று தெரிவித்தான்.

இதை தொடர்ந்து அவன் சிறுவர் இல்லத்துக்கு அனுப்பப்பட்டன். அவன் மீது வழக்கு தொடர்வது பற்றி பொலிஸார் ஆலோசித்து வருகிறார் கள். வனப்பகுதியில் தீ பற்றியதால் 12 பேர் பலியானார்கள். 78 பேர் காயம் அடைந்தார்கள் 2,300 வீடுகள் சேதம் அடைந்தன. (அ-5)

# சாலையைச் சுத்தப்படுத்த இயந்திரம்

(சீனா)



சாலையை சுத்தப்படுத்த புதிய இயந்திரத்தை சீனர்க்கள் கண்டுபிடித்துள்ளனர்.

சாலையை சுத்தப்படுத்த ஒரு இயந்திரத்தை சீனர்கள் உருவாக்கியுள்ளனர். இதில் ஒரு டஜனுக்கும் மேற்பட்ட துடைப்பங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

துடைப்பங்கள் இயந்திர உதவியுடன் சுற்றுகிறது. ஒரே சுற்றில் எல்லா குப்பைகளையும் கூட்டி ஒரு இடத்தில் குவித்து விடுகிறது. அந்த குப்பையை அள்ள மற்றொரு இயந்திரம் பயன்படுத்தப்படுகிறது. இந்த இயந்திரத்தை சுற்றுலா பயணிகள் வியப்புடன் வேடிக்கை பார்க்கின்றனர். (அ-5)

# புகைக்கும் கணவர் வேண்டாம் கல்லூரி மாணவிகள் சபதம்



(கொச்சி)

சிகரெட் பிடிக்கும் இளைஞர்களை கணவராக ஏற்கமாட்டோம் என்று கல்லூரி மாணவிகள் சபதம் ஏற்றுள்ளனர். எர்ணாகுளம் செயின்ட் தெரசா கல்லூரியில் புகையிலை எதிர்ப்பு விழிப்புணர்வு விழாவில் பின்னணி பாடகர் கே.ஜே.ஜேசுதாஸ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

அவரது முன்னிலையில் கல்லூரி மாணவிகள் வித்தியாசமான சபதம் ஒன்றை ஏற்றனர்.

சிகரெட் போன்ற புகை பிடிக்கும் பழக்கம் உள்ள இளைஞர்களை திருமணம் செய்து கொள்ளமாட்டோம். மது மற்றும் போதைக்கு அடிமையான இளைஞர்களையும் திருமணம் செய்யப்போவதில்லை என்பதும் சபதத்தின் மற்றொரு விதி.

உலகில் எங்கோ ஓர் மூலையில் இது போன்ற விழிப்புணர்வு பிரசாரம் செய்தாலும் அது உலகின் எல்லாப்பகுதி களி லும் சென்று சேரும் என்று ஜேசுதாஸ் பேசினார். மற்றவர்கள் புகை பிடிப்பது பெண்களைத்தான் அதிகம் பாதிக்கிறது. சுற்றியுள்ளவர்கள் ஊதும் புகை சும்மா இருப்போருக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்துகிறது என்று மாணவிகள் கூறினர். (அ-5)

# ஆமை கடத்தல்



(தேன்பாசர்)

ஆமைக்கறி மற்றும் ஓட்டில் மருத்துவ குணம் இருக்கிறது என்று எந்த நேரத்தில் எந்தப் புண்ணியவான் சொன்னாரோ தெரியவில்லை. ஆனால் அதன் விளைவாக உலகமெங்கும் ஆமைக்கடத்தல் ஜரூராக நடந்து கொண்டே இருக்கிறது.

படத்தில் காண்பது பாலி தீவில் உள்ள தேன்பாசர் என்ற இடத்தில் கடத்தல்காரர்களிடமிருந்து மீட்கப்பட்ட ஒரு ஆமை. 6 கடத்தல்காரர்களைக் கைது செய்த காவல் துறையினர், அவர்களிடமிருந்து 11 ஆமைகளைக் கைப்பற்றியுள்ளனர்.

பசிபிக் மற்றும் இந்தியப் பெருங்கடல்களுக்கு மத்தியில் இணைப்பு மையம் போல இந்தோனேஷியா அமைந்திருக்கிறது. உலகின் ஒட்டுமொத்த ஆமை எண்ணிக்கையில் 7 இல் 6 ஆமைகள் இங்குதான் இருக்கின்றன.

எனவேதான் கடத்தலும் அமோகமாக நடக்கிறது. (அ-5)

## உலக தரிசனம்

# பேய் கொண்டாட்டம்



(போர்ட் ஸ்மித்)

உலகம் முழுவதும் ஹாலோவீன் எனப்படும் திருவிழா களைகட்டி வருகிறது. இதையொட்டி அனைவரது கவனத்தையும் ஈர்க்கும் வகையிலான வித்தியாசமான ஊர்வலம் நடைபெற்று வருகின்றன.

அமெரிக்காவின் ஆர்க்கன்சாஸ் மாநிலத்தில் உள்ள போர்ட் ஸ்மித் நகரில் நடைபெற்ற காட்சிதான் இது. ராண்டி கீன் என்பவர் தனது 1962 ஆம் வருடத்திய மாடல், வோல்ஸ் வேகன் காரில் வலம் வருகிறார்.

போலியான மனித உருவம் ஒன்று அவரது காரின் முன்புறமிருந்து பேசுவது போல் வடிவமைக்கப்பட்டிருந்தது பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது. (அ-5)

# கிரிஸ்டல் கம்ப்யூட்டர்



ஜப்பானின் என் இசி நிறுவனம் லாவி ஜி ஹலோ கிட்டி என்ற பெயரில் புதிய லேப்டாப் கம்ப்யூட்டர்களை அறிமுகம் செய்துள்ளது. தங்க பிளேட் பதிக்கப்பட்ட இந்த கம்ப்யூட்டர்கள் ஸ்வரோவ்ஸ்கி கிரிஸ்டல்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

15.4 இஞ்ச் எல்சிடி திரை 120 ஜிபி ஹெச் டிசி ஆகியவை இச் சிறப்பம்சங்களாக இதன் திரையில் சேமித்து வைத்துக்கொள்ளவே சிறப்புவால் பேப்பர்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. (அ-5)

# சிற்பந்தான்!



(சிட்னி)

நம் ஊர் தீம் பார்க்கு களில் சிலை போல ஆடா மல் அசை யாமல் நிற்கும் மனிதனைப் பார்த்திருக்கி றோம். ஆனால் படத்தில் அசையாமல் இருப் பது பைபர்கிளாஸ் மனித சிற்பம்.

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் உள்ள போண்டி கடற்கரையில் தி.சீ எக்ஸ்பி ஷன் நிறுவனத்தின் 11ஆவது வருடாந்திர சிற்பக் கண்காட்சி நடைபெற்று வருகிறது.

இதில்தான் அந்நாட்டைச்சேர்ந்த சிற்பி டிம் கைல் என்பவரின் கைவண்ணத்தில் உருவான இந்த சிற்பம் வைக்கப்பட்டுள்ளது.

இதில் 27 நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட ஓவியர்கள் தங்களது படைப்புக்களை காட்சிப்படுத்தியுள்ளனர். (அ-5)

# ஸ்பெயின் ரயில் குண்டுவெடிப்பு வழக்கில் குற்றவாளிக்கு 40 ஆயிரம் ஆண்டு சிறை

(மேட்ரிட்)

மேட்ரிட்டில் கடந்த 2004ஆம் ஆண்டு 191 பேரின் உயிரைப் பறித்த ரெயில் குண்டு வெடிப்பு வழக்கில் முக்கிய குற்றவாளிகளான மொராகோவை சேர்ந்த ஜமால் சௌகம் மற்றும் ஓத்மன் எல்கௌனிக்கு தலா 40 ஆயிரம் ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள் ளது.

ஐரோப்பாவில் நடைபெற்ற மிக மோசமான தாக்குதலாக கருதப்படும் இந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் 21 பேர் குற்றவாளிகள் என்று ஸ்பெயின் நீதிமன்றம் ஒன்று தீர்ப் பளித்துள்ளது.

முக்கிய குற்றவாளிகளான சௌகம் மற்றும் கௌனி ஆகியோர் தீவிரவாத செயல்களில் ஈடுபட்டதற்காக இந்த அளவு கடுமையான தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட வெடி பொருட்களை வாங்க உதவியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள ஸ்பெயினைச் சேர்ந்த எமிலியோ சவுரஸ் திராஸோராஸ் என்பவருக்கும் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் மொத்தம் 28 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டது இதில் எகிப்தின் முகம்மது என அழைக்கப்படுபவரும் இந்த குண்டு வெடிப்புக்கு சதித்திட்டம் தீட்டியவர் என்று கருதப்படுபவருமான ஓஸ்மான் சையத் அகமது உள்ளிட்ட 7 பேர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாததால் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். (அ-5)

# உலக கழிவறை வசதி மாநாடு புதுடில்லியில் ஆரம்பமானது

உலக மக்களுக்கு சுகாதாரமான கழிவறை வசதி வழங்கும் சவாலை எப்படி எதிர்கொள்வது, 2015-ம் ஆண்டில் அனைவருக்கும் சுகாதாரமான கழிவறை வசதி செய்துகொடுப்பது என்று ஐ.நா. மன்றம் நிர்ணயித்துள்ள புத்தாயிரமாண்டின் வளர்ச்சி இலக்கை அடைவது எப்படி என்பது குறித்து விவாதிப்பதற்காக உலக கழிவறை வசதி மாநாடு இந்தியத் தலைநகர் புதுடில்லியில் கடந்த புதன்கிழமை ஆரம்பமானது. நான்கு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் சீனா, ரஷ்யா, இலங்கை, இந்தியா உட்பட 40க்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

இந்திய அரசின் பல்வேறு அமைச்சகங்களின் ஒத்துழைப்புடன் புதுடில்லியை மையமாகக்கொண்ட சுலாப் இண்டர்நேஷனல் என்ற தன்னார்வ அமைப்பு இந்த மாநாட்டை நடத்துகிறது. உலக அளவில் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது எவ்வளவு பெரிய சவாலாக இருக்கிறதே அதே அளவுக்கு அனைவருக்கும் சுகாதாரமான கழிவறை வசதி செய்து கொடுப்பதும் பெரிய சவாலாகவுள்ளது.

உலக மக்கள் தொகையில் 40 சதவீதம் அதாவது 2.6 பில்லியன் மக்கள் கழிவறை வசதி இல்லாமல் திறந்தவெளிகளில் சுகாதாரம் மற்ற இடங்களிலும் தங்கள் இயற்கை உபாதைகளை தீர்த்துக்கொள்கிறார்கள் என்று ஆய்வு தெரிவிக்கிறது.

இந்தியாவில் மட்டும் 700மில்லியன் மக்கள் முறையான கழிவறை வசதி இல்லாமல் இருக்கிறார்கள். அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் ஏறத்தாழ போதிய கழிவறைவசதி உள்ள நிலையில் ஆசியா, ஆபிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளில் தான், சுகாதாரமான கழிவறை என்பது பெரும் பிரச்சினையாகவுள்ளன. ஆனால் வளரும் நாடுகளில் அனைவருக்கும் கழிவறை வசதி செய்து தருவதற்கு போதிய தொழில் நுட்பமும், நிதி ஆதாரமும் பெரும் பிரச்சினையாகவுள்ளது. (அ-5)

# எயிட்ஸ் நோய் ஹெய்ட்டியிலிருந்தே உலகளாவிய ரீதியில் பரவியது

## அமெரிக்க விஞ்ஞானிகளால் கண்டுபிடிப்பு

(வாஷிங்டன்)

ஆட்கொல்லி நோயான எயிட்ஸ் ஏற்படுவதற்கு காரணமாக அமைந்த எச்.ஐ.வி வைரஸானது 1969 ஆம் ஆண்டு ஹெய்ட்டியிலிருந்தே அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குப் பரவியதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்க தேசிய விஞ்ஞான அக்கடமியைச் சேர்ந்த விஞ்ஞானிகளே இக் கண்டுபிடிப்பைச் செய்துள்ளனர்.

இவ் விஞ்ஞானிகள் ஹெய்ட்டியிலிருந்து அமெரிக்காவுக்கு குடிவந்த எயிட்ஸ் நோய் தொற்றுக்கு உள்ளாகியிருந்த 5 நோயாளிகளின் குருதியை பரிசோதனைக்குட்படுத்தினர்.

நோயின் ஆரம்ப நிலையிலிருந்த அவர்களின் குருதியின் பரம்பரையலகுடன் உலகளாவிய ரீதியில் ஏனைய 117 எயிட்ஸ் நோயாளிகளிடமிருந்து பெற்ற பரம்பரையலகுகள் ஒப்பிடப்பட்டன.

இதன்போது இந்நோயின் அடிப்படை நிலையானது. ஹெய்ட்டி எயிட்ஸ் நோயாளர்களிடம் அவதானிக்கப்பட்டது.

இந்நோயானது ஹெய்ட்டியில் 1966ஆம் ஆண்டளவில் தோன்றியிருக்கலாம் என நம்பப்படும்.

அதே சமயம் ஹெய்ட்டியிலிருந்து 1969 ஆம் ஆண்டளவில் அமெரிக்கா வந்த தனிநபர் ஒருவரால் இந்த வைரஸ் அமெரிக்கர்களுக்கு பரப்பப்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது. (அ-5)

# குரு பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?



## இடபம்

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 பாதங்கள் வரை

**16.11.2007 முதல் 30.11.2008 வரை**

(பெயரின் முதல் எழுத்துக்கள்: இ, உ, ஏ, ஓ, வ, வி, வு, வே, வோ உள்ளவர்களுக்கும்)

திருவருளின் துணையோடு திட்டங்களில் வெற்றி பெற வைக்கும் எட்டாமிடத்து குரு!

கூட்டங்களுக்கு மத்தியில் இருக்கும் பொழுது கும்பிடத் தோன்றும் விதத்தில் காட்சியளிக்கும் ரிஷப ராசி நேயர்களே! மாற்றங்களை அதிகம் விரும்பும் உங்களுக்கு வாட்டத்தை போக்க வந்துவிட்டது குரு பெயர்ச்சி. இனி மாற்றங்களையும் காண்பீர்கள். ஏற்றங்களையும் காண்பீர்கள். இதுவரை தோற்றங்களை மட்டும் அழகாக வைத்திருந்த நீங்கள் இனி தொகையையும் சேர்த்து அழகான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள போகிறீர்கள்.

இதுவரை ஏழாமிடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான், நவம்பர் 16ஆம் திகதி முதல் அஷ்டமத்தில் சஞ்சரித்து அதிரடி மாற்றங்கள் யாவும் செய்யப் போகிறார். 8இல் குரு வந்தால் எல்லோருக்கும் பயம் வந்துவிடும். ஆனால் நீங்கள் மட்டும் பயப்படவேண்டாம். உங்கள் ராசிக்கு 8க்கு அதிபதி எட்டுக்கே வருகிறார் அல்லவா? எனவே 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்' என்ற அடிப்படையில் நல்ல காரியங்கள் பலவற்றிற்கும் பிள்ளையார் சுழி போடப் போகிறார். ஆனால் இடையிடையே விரயங்களையும் கொடுத்து வியாழன் தன்னை நினைவுறுத்துவார். அப்பொழுதெல்லாம் நீங்கள் கூப்பிடும் பெயர் கும்பிடும் தெய்வத்தின் பெயராகவே இருக்கவேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

### அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுபவர்

பேச்சாற்றலும், பிறரை கவரும் தோற்றமும் தான் உங்களது வெற்றிக்கு காரணம். உங்களுக்கு வரும் பிரச்சினையை விட உங்களைச் சார்ந்தவரின் பிரச்சினைக்குத் தான் அதிக முக்கியத்துவம் கொடுப்பீர்கள். பணம் சம்பாதிக்கிறீர்களோ இல்லையோ மனிதர்களை அதிகம் சம்பாதித்து வைத்திருப்பீர்கள்.

கவலையில்லாத மனிதன் என்று கூட உங்களைச் சொல்லலாம். காரணம் எந்தப் பிரச்சினை வந்தாலும், போனால் போகட்டும் போடா என்று எடுத்துரைப்பீர்கள். யாரை எப்போது போய் பார்த்தால் காரியம் முடியும் என்ற ரகசியத்தை கற்று வைத்திருப்பவர்களின் பட்டியலில் முதலிடம் பிடிப்பீர்கள். பொருத்தம் பார்த்து செய்யும் திருமணத்தால் தான் உங்கள் வாழ்க்கையில் வருத்தம் இல்லாமல் இருக்கும். ஒரு பொறுப்பை உங்களிடம் கொடுத்தால் எவ்வளவு விரைவில் அதை முடிக்கமுடியுமோ, அவ்வளவு விரைவில் அதை முடித்துக் காட்டுவீர்கள்.

### அசுர குரு வழிபாடு, அதிர்ஷ்டம் தரும்

உங்கள் ராசி நாதன் சுக்ரன், 'களஸ்திர காரகன்' என்று வர்ணிக்கப்படுகிறார். எனவே உங்கள் குடும்பம் சிறப்பாக இருக்க சுக்ரனின் பலம் தான் தேவை. அப்படி அசுர குருவின் ஆதிக்கம் மேலோங்கிய நிலையில் இருந்தால் தொழில் வளர்ச்சி கூடும். துன்பங்கள் உங்களை விட்டு ஓடும். எனவே அதற்குரிய வழிபாடுகளை மேற்கொள்வதோடு உங்கள் ராசி நாதனுக்கு நட்புக் கிரகத்தின் அடிப்படையில் பெயர் ஏன் ஆதிக்கத்தையும் அமைத்துக் கொண்டால் ஒளி ஜோதிடமும் உங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டும்.

### முப்பெரும் பார்வையால் ஏற்படும் முன்னேற்றம்

இதுவரை 7 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் அதன் புனிதப் பார்வையை பதிக்கும் இடங்களில் எல்லாம் நற்பலன்களை வரவழைத்துக் கொடுக்கப் போகிறார். உங்கள் ராசிக்கும் ஆயுள் ஸ்தானத்திற்கும், லாப ஸ்தானத்திற்கும் அதிபதியாக விளங்குபவர் குரு. ஆனால் ராசிநாதனுக்கு பகைவராக விளங்குபவர். எனவே இதுவரை அவர் உங்கள் ராசியை பார்த்தபோது கடந்த ஓராண்டாக செய்யாத நற்பலன்களை இப்போது செய்வார் என்று நம்பலாம்.

### உதிரி வருமானங்கள் பெருகும் நேரம்

குடும்ப ஸ்தானத்தை குரு பார்ப்பதால் குடும்பச்சுமை குறையும். உங்கள் வருமானத்தை மட்டுமே நம்பியிருந்த குடும்பத்தினர்களுக்கு இனி உதிரி வருமானங்களும் வந்து சேரும். பெற்றோர் உற்றார் உறவினர்கள் உங்கள் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பர்.

மற்றவர்கள் மதிக்கும் அளவிற்கு குடும்பத்தில் மதிப்பும், மரியாதையும் இல்லையே என்று ஏங்கியவர்களுக்கு இக் காலம் ஒரு பொற்காலமாகும். சிக்கல்கள் தீரும். செல்வ நிலை உயரும்.

இதுவரை உத்தியோகத்தில் இருந்தவர்களுக்கு இனி வி.ஆர்.எஸ். பெற்றுக்கொண்டு விரும்பியபடியே தொழில் செய்யலாமா என்ற சிந்தனை மேலோங்கும். தொழில் செய்பவர்கள் வேறு தொழில் செய்யலாமா? இல்லை தொழிலில் இடமாற்றத்தை செய்யலாமா? எதிர்பார்த்தபடி இலாபம் கிடைக்க என்ன வழி என்பதை பற்றி சிந்திப்பவர்களுக்கு விடை கூற இந்த வியாழன் பெயர்ச்சி உறுதுணையாக இருக்கும்.

சுய ஜாதகத்தை ஒருமுறை புரட்டிப் பாருங்கள். தெசா புத்தி எப்படி இருக்கிறதோ அதன் வழியே தான் உங்கள் வாழ்க்கைப் பாதையும் செல்லும். தெசா புத்தி வலுவாக இருந்தால் இடமாற்றம், ஊர் மாற்றம் உத்தியோக மாற்றம், தொழில் மாற்றம் போன்றவற்றை ஏற்றுக் கொள்ளலாம். இல்லையேல் எப்பொழுது தெசா புத்தி வலுவாக இருக்கிறதோ அப்பொழுது அதை ஏற்றுக்கொள்ளலாம். அதுவரை இருக்கும் இடத்திலேயே சில வழிமுறைகளையும், வழிபாடுகளையும் மேற்கொண்டு யோக பலம் பெற்ற நாளில் தெய்வ தரிசனங்களை மேற் கொள்ளுங்கள். தேக நலனும் செல்வ வளமும் கூடிவரும்.

### வாகன யோகத்தால் வளம் காணும் நேரம்

குரு தன் பார்வையை சுக ஸ்தானத்தில் பதிக்கிறார். எனவே சுகங்கள் கூடும். சந்தோஷங்கள் வந்துசேரும். சுற்றித் திரிவதில் பிரியம் காட்டுவீர்கள். பயணங்கள் அதிகரிக்கும். தாய் வழி ஆதரவு பெருகும். வீடு வாசல் இல்லையே என்ற கவலை தீரும். கட்டிய வீட்டை வாங்குவதா அல்லது வீடு கட்டி குடியேறுவதா என்பதை செவ்வாயின் பலத்தைப் பொறுத்து தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். பூர்வீகச் சொத்துக்களில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். பழைய வீட்டைப் பராமரிக்க ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். பிள்ளைகளின் கல்வி நலன் கருதி எடுத்த புது முயற் சிகளில் வெற்றி கிட்டும்.

### அந்நிய தேச அனுகூலம் கிடைக்கும் நேரம்

குருவின் பார்வை பயண ஸ்தானத்தையும் பார்க்கிறது. ஆயினும் அர்த்தாஷ்டமச் சனி நடைபெறுவதால் திடீர் பயணங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம். ஒரு சிலர் நண்பர்களை நம்பிச் சென்று ஏமாற்றத்தை சந்திக்க நேரிடலாம். எனவே சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டையும் வியாழக்கிழமை தேவ குருவையும் வெள்ளிக்கிழமை அசுர குருவையும் விடாது வழிபட்டு வந்தால் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். அதே நேரத்தில் குருவின் பார்வை 12-இல் பதிவதால் அந்நிய தேசத்தில் உள்ள நண்பர்கள் மற்றும் உறவினர்கள் ஒத்துழைப்பால் அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும் வருமானம் திருப்தியாக அமைய வழி பிறக்கும்.

புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும் பழைய பங்குதாரர்கள் விலகலாம். மேலதிகாரிகளின் ஒத்துழைப்போடு ஊதிய உயர்வு, உத்தியோக உயர்வு போன்வற்றை ஒரு சிலர் காண நேரிடும்.

### மகர குருவால் ஏற்படும் மாற்றம் (23.04.2008 முதல் 04.06.2008 வரை)

இக்காலம் உங்களுக்கு ஒரு பொற்காலம் என்றே சொல்லவேண்டும் தனுசு சஞ்சரித்து வந்த குரு மகரத்தில் நிச்சயம் பெற்று சஞ்சரிக்கும். இந்த நேரம் 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜஜோகம்' என்பவற்றுக்கு இணங்க நல்ல பலன்களை அள்ளிக் கொடுக்கப் போகிறது. ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும் .அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும். அதன் பார்வை 1,3,5 ஆகிய இடங்களில் பதிவதால் நீண்டநாள் நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள் சகோதர வழி ஒத்து ழைப்புகள் கூடும் உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். கடன் சுமை குறைய கை கொடுத்து உதவ முன்வருவர். மடமடவென காரியங்கள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டே இருக்கும் பிள்ளைகளின் வழியில் நல்ல தகவல்கள் வந்து சேரும் பிள்ளைகளின் திருமண பேச்சை வெற்றிகரமாக முடித்து வைப்பீர்கள்.

### வளர்ச்சியைக் கூட்டும் வார வழிபாடு

வெள்ளிக்கிழமை தோறும் தெற்கு நோக்கிய அம்பிகையை வழிபட்டுவாருங்கள் நந்திக்கு ஜோடி தீபம் ஏற்றி நல்லருளை காண்க.

### செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு

அஷ்டமத்து குரு அதன் பார்வை பலத்தால் அதிர்ஷ்ட வாய்ப்புக்களை அள்ளித் தர பட்டமங்களத்திற்கு வாருங்கள். அங்குள்ள தென்முகக் கடவுள் உங்கள் திட்டங்கள் வெற்றி தர திருவருள் தருவார். தார பலம் பெற்ற நாளில் சந்தித்தால் ஏராளமான பலன் கிடைக்கும் இல்லத்திலும் அமைதி கூடும். ஜோரான வாழ்க்கை அமையும் சொல்லை செயலாக்கி காட்டுவீர்கள்.

### அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்(5.04.2008 முதல் 20.09.2008 வரை

குரு உங்கள் இராசிக்கு 8,11-க்கு அதிபதியாக விளங்குவதால் அதன் வக்ர காலம் வழிபாட்டில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய காலமாகவே அமையும். லாபாதிபதி வக்ரம் பெறுவது நல்லதல்ல எனவே வருமானத்தில் தடை ஏற்படலாம். கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலாது கடன் சுமை கூடும் எனவே எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்தால் எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி பெறலாம். அஷ்டமாதிபதி வக்ரம் பெறுவதால் ஆரோக்கியத்தில் குறை ஏற்படாது அலைச்சல் அதிகரிக்கும் ஆதாயம் குறையும் பயணம் அதிகரிக்கும் நேரம்

### கெட்டி மேளம் கொட்ட வைக்கும் நவம்பர் 15

குரு உங்கள் இராசிக்கு 7ஆம் இடத்திலிருந்து 8 ஆம் இடத்திற்கு செல்வதால் அஷ்டமத்து குரு அதை செய்து விடுமோ இதைச் செய்துவிடுமோ என்று கவலைப்பட வேண்டியதில்லை. இருக்கும் இடம் 8ஆம் இடமாக இருந்தாலும் பார்க்கும் இடம் 2,4,12 ஆகிய வீடுகளாக அமைகின்றன. குரு உங்கள் ராசிக்கு 8,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியாகும். 8 க்கு அதிபதியின் பார்வை பட்டால் கெட்டி மேளம் கொட்டுகிற வாய்ப்பு இல்லத்தில் உருவாகும். அட்டியின்றி சுய விரயங்கள் செய்யலாம். அடுத்தவர் பணம் உங்கள் கைகளில் புரண்டு கொண்டே இருக்கும் திட்டமிட்டபடியே காரியங்கள் நடைபெற தெய்வங்களை தேர்ந்தெடுத்து வழிபட்டால் மட்டற்ற மகிழ்ச்சி மனதில் இடம் பிடிக்கும்.

எட்டில் வரும் குருவால்
ஏராளம் மாற்றம் வரும்!
பற்றோடு குருவதனைப்
பணிந்து வணங்கிவிட்டால்!
வெற்றி வாய்ப்புக்களே
வீடதனைத் தேடி வரும்!
சுற்றம் மகிழ்ந்திருக்க
சுய விரயம் பல செய்வீர்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது அந்த அடிப்படையில் 8ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குருவால் இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறும் .குரு தனது சொந்த வீட்டிலிருந்து உங்கள் குடும்ப ஸ்தானத்தைப் பார்ப்பதால் குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும் கொடுக்கல்வாங்கல்கள் ஒழுங்காகும். கடுமையாக உழைத்தும் காசு பணத்தை சேர்க்கவில்லையே என்ற கவலை இனி மாறும் உங்கள் திறமைக்கு ஏற்ற வாய்ப்புக்கள் தேடிவரும். உங்கள் பொறுமைக்கு பரிசு காத்திருக்கிறது.

### இடப ராசிப் பெண்களுக்கு நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாக்கும்

இடப ராசியில் பிறந்த பெண்களுக்கு இந்த குருப்பெயர்ச்சியால் நற்பலன் கிடைக்க முறையாக வாரவழிபாடு மாத வழிபாடு வருட வழிபாடுகளை மேற்கொள்ளவேண்டும் வருவாய் எவ்வளவுதான் வந்தாலும் செலவு கூடும் உறவினர் வருகையும் ,விருந்து வைபவங்களும் நடைபெற்றுக்கொண்டே இருக்கும். கணவன்-மனைவி, மாமியார் , நாத்தனார், கொழுந்தனார் ஆகியோருடன் கருத்து வேறு பாடு ஏற் படாது இருக்க விட்டுக்கொடுத்து செல் வது நல் லது. புதிய பொறுப்புக்களை ஜோசித்து ஏற்றுக் கொள்வதே நல்லது.

சுப காரிய பேச்சுக்கள் குருவின் வக்கிர காலத்து முடிவாகும். வீடு மாற்றம் செய் யும் பொழுது வாஸ்து பார்ப்பது நல்லது. பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும் ஏப்ரலுக்கு மேல் ஆபரண சேர்க்கை உண்டு. கிரிவரம் வருவதன் மூலம் கீர்த்திகளைப் பெறலாம்.

## நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

இன்று 'மில்க்வைற்' தொழிலதிபர் சிவதர்ம வள்ளல் கலாநிதி க.கனகராசா (ஜே.பி) அவர்களின் 80 ஆவது அகவை பூர்த்தி தினமும் 9ஆம் வருட நினைவு தினமுமாகும். (அ)

## கைத் தொலைபேசி திருடியவருக்கு ஒரு வருட சிறைத் தண்டனை

(பருத்தித்துறை)

பகல் வேளையில் வீட்டிலிருந்த கையடக்கத் தொலைபேசியை திருடிய திருடன் குற்றத்தை ஒப்புக்கொண்டார். நீதிமன்றம் ஒரு வருட சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

அல்வாய் சக்கோட்டையைச் சேர்ந்த ஒருவரை பொலிஸார் கையடக்கத் தொலை பேசியைத் திருடினார் எனக் குற்றஞ்சாட்டி பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிபதி கே.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

சந்தேக நபர் விசாரணைகளின்போது திருட்டுக் குற்றத்தை ஒப்புக்கொண்டார். கையடக்கத் தொலைபேசியைத் திருடிய குற்றத்திற்கு 6 மாத சிறைத் தண்டனையும் திருடிய கைத்தொலைபேசி வைத்திருந்த குற்றத்திற்கு 6 மாத சிறைத் தண்டனையுமாக 1 வருட சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. (அ-52)

## பகுதித் தலைவி நியமனம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பகுதித் தலைவியாக இருந்த திருமதி ஜோதிமலர் தியாகலிங்கம் கல்விச் சேவையிலிருந்து ஓய்வுபெற்றதையடுத்து திருமதி கெளரி சந்திரலிங்கம் பகுதித் தலைவியாக கல்வித் திணைக்களத்தினால் நியமனம் செய்யபட்பட்டு அவர் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். (அ-52)

## ஆளுநர் சபைக் கூட்டம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டக் கிளையின் ஆளுநர் சபைக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு, இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ். மாவட்டக் கிளையில் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ-134)

## நரகாசுரன் போர்

(பருத்தித்துறை)

அருள்மிகு விஸ்ணு ஆலயமான வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவிலில் எதிர்வரும் 8ஆம் திகதி தீபாவளித் தினத்தன்று 'நரகாசுரன் போர்' நடைபெறவுள்ளதாக ஆலய அறங்காவலர் சபை அறிவித்துள்ளது. (அ-52)

## மரக்கறி விலை உயர்வு

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் என்றுமில்லாதவாறு மரக்கறி களின் விலை உயர்ந்துள்ளது. கிலோ கத்தரி 100 ரூபாவாகவும் வெண்டி 160 ரூபாவாகவும் பயிற்றங்காய் 160 ரூபாவாகவும் பீற்றூட் 140 ரூபாவாகவும் புடலங்காய் 140ரூபாவாகவும் மரக்கறிச் சந்தையில் விற்கப்படுகின்றது. (அ-72)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்.மாநகரசபை சுகாதார வைத்தியப் பிரிவினரால் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை கலைமகள் சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணி வரை வள்ளுவன் சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாகஅறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## வயல்களில் வெள்ளம்

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக கடும் மழை பெய்து வருகின்றது. நாரந்தனை, கரம்பன், சரவணை,சின்னமடு,புளியங்கூடல் போன்ற இடங்களில் உள்ள நெல் வயல்களில் தண்ணீர் தேங்கி நிற்பதால் நீரை அகற்றும் பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். (அ-72)

## இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளை விரைவில் இலத்திரனியல் வலைப் பின்னலுக்குள் வரவுள்ளது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கி கணனிமயப்படுத்தப்பட்டு இலங்கை வங்கியின் இலத்திரனியல் வலைப்பின்னலுக்குள் கொண்டு வரப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் சுமார்25 இலட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளபட்டு வருகின்றன.

இந் நடவடிக்கைகள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு நவீன வசதிகளுடனான இலகு வங்கிச் சேவைகளை வங்கி வழங்கவுள்ளது. தற்போது வங்கிக் கட்டடம் நவீன மயப்படுத்தப்பட்டு வருகின்றது. கட்டடம் நவீன மயப்படுத்தப்பட்டதும் கொழும்பிலிருந்து கணனி வல்லுநர்கள் இலங்கை வங்கித் தலைமையகத்தால் அனுப்பிவைக்கப்பட்டு நவீன வசதிகள் ஏற்படுத்தப்படும்.

தற்போது பருத்தித்துறை இலங்கை வங்கி மிகக் குறுகிய இடத்தில் மிகச் சிரமங்கள் மத்தியில் சேவையாற்றி வருகின்றது.

வெகு விரைவில் வங்கி நவீன மயப்படுத்தப்பட்டு குளிரூட்டப்பட்ட கட்டடத்தில் கணனி மயப்படுத்தப்பட்ட இலகு வங்கிச் சேவையை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-52)

# தரவரிசையில் 10ஆம் இடத்தில் சச்சின்

(துபாய்)

ஒருநாள் போட்டி துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசை பட்டியலை ஐ.சி.சி வெளியிட்டது.



சமீபத்திய அவுஸ்திரேலிய தொடரில் சுமாராக செயல்பட்ட சச்சின் ஒரு இடம் பின்தங்கி 10ஆம் நிலையில் உள்ளார்.

சச்சின் தவிர வேறு எந்த இந்திய வீரரும் டாப்-10 பட்டியலில் இடம் பிடிக்கவில்லை. இந்திய துணை அணித்தலைவர் யுவராஜ் (17), தோனி (18) சற்று பின்தங்கியுள்ளனர்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் ஓட்டங்கள் குவித்த பாகிஸ்தான் வீரர் முகமது யூசுப் மள மளவென 10 இடங்கள் முன்னேறி 8ஆவது வீரராக வலம் வருகிறார். அவுஸ்திரேலியாவின் பொண்டிங் முதலிடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளார். அடுத்து இரு இடங்களை சைமண்ட்ஸ், ஹைடன் கைப்பற்றியுள்ளனர். (அ-5)

# இரண்டாவது இருபது -20 2009 இல் இங்கிலாந்தில்

(துபாய்)

இரண்டாவது இருபது-20 உலக கோப்பை கிரிக்கெற் போட்டி இங்கிலாந்தில் 2009ஆம் ஆண்டு நடக்கிறது. இதில் 12 அணிகள் பங்கேற்கின்றன. அணிகள் எந்தெந்த பிரிவில் இடம்பெறுவது என்பது குறித்து துபாயில் நடந்த ஐ.சி.சி.கூட்டத்தில் விவாதித்து முடிபு செய்யப்பட்டுள்ளன.

இதன்படி நடப்பு சாம்பியன் இந்தியாவுக்கு முதல் சுற்று எளிதாக அமைந்துள்ளது. "ஏ" பிரிவில் இடம்பெற்றுள்ள இந்தியாவுடன். பங்களாதேஷ், சிம்பாவ்வே ஆகிய அணிகள் உள்ளன. 'பி' பிரிவில் பாகிஸ்தான், இங்கிலாந்து மற்றும் ஒரு உறுப்பு நாடு 'சி' பிரிவில் அவுஸ்திரேலியா, இலங்கைத வெஸ்ட் இண்டீஸ் 'டி' பிரிவில் நியூசிலாந்து, தென்னாபிரிக்கா மற்றும் ஒரு உறுப்பு நாடுஆகிய அணிகள் இடம்பெற்று இருக்கின்றன. இந்த வகை போட்டிகள் குறைந்த எண்ணிக்கையிலேயே நடந்து இருப்பதால் தரவரிசை இன்னும் வெளியிடப்படவில்லை.

இதையடுத்து முதலாவது உலக கோப்பை போட்டியில் அணிகள் பெற்ற இடத்தின் அடிப்படையில் இந்தகுரூப் பிரிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# மீண்டும் பாகிஸ்தான் அணியில் விளையாட ரஸாக் விருப்பம்

சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்ற பாகிஸ்தான் அணியின் சகலதுறை ஆட்டக்காரர் அப்துல் ரஸாக் தனது முடிவை மாற்றிக்கொண்டுள்ளார். அவர் மீண்டும் பாகிஸ்தான் அணியில் விளையாட விருப்பம் தெரிவித்துள்ளார்.

தனது நீண்டநாள் பயிற்சியாளர் அப்துல் ஸைதி மற்றும் தான் விளையாடும் கழகத்துடன் ஆலோசனை நடத்தியதன் பின்னரே அப்துல் ரஸாக் இந்த முடிவினை எடுத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து அப்துல் ரஸாக்கின் முடிவை ஏற்றுக்கொண்டுள்ள பாகிஸ்தான் தேர்வுக்குழு தலைவர் சலாஹுத் தீன் அஹ்மட் அவர் மீண்டும் அணியில் இடம் பிடிக்க முதல்தர போட்டிகளில் தனது திறமையை வெளிக்காட்ட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். அத்துடன் முதல்தர போட்டிகளில் விளையாடும் அனைத்து பாகிஸ்தான் வீரர்களும் பாக்.அணியில் இடம்பெற வாய்ப்பு உள்ளதாகவும் அஹ்மட் தெரிவித்தார்.

எனினும்த இந்திய கிரிக்கெற் லீக்கில் விளையாடும் வீரர்கள் பாக்.அணிக்கு தேர்வு செய்யப்படமாட்டார்கள் என்பதில் அந்நாட்டு கிரிக்கெற்சபை உறுதியாகவேயுள்ளது. இந்நிலையில் அப்துல் ரஸாக் இந்திய கிரிக்கெற் லீக்கில் விளையாடுவதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அண்மையில் தென்னாபிரிக்காவில் நடந்து முடிந்த இருபது-20 உலகக்கிண்ண போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் அப் துல் ரஸாக் இணைக்கப்படாததை அடுத்தே அவர் ஓய்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# அக்தரைப்பற்றி அலட்டிக்கொள்ளவில்லை அதிரடி ஆட்டக்காரர் உத்தப்பா தெரிவிப்பு

(புதுடில்லி)

பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரை சந்திக்க தயாராக இருப்பதாகவும் அக்தரை பற்றி கவலைப்படவில்லை எனவும் உத்தப்பா தெரிவித்துள்ளார். பாகிஸ்தான்



கிரிக்கெற் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட், ஒரு நாள் தொடரில் பங்கேற்கவுள்ளது. இத் தொடர் குறித்து அதிரடி துடுப்பாட்ட வீரர் உத்தப்பா அளித்த பேட்டி.

சோயப் அக்தர் அவர்களது முன்னணி பந்து வீச்சாளர். எனினும் இவரை பற்றி அதிகம் கவலைப்பட தேவையில்லை. இயல்பான ஆட்டத்தை வெளிபடுத்தினால் போதுமானது. அனைத்து பந்து வீச்சாளர்களுக்கு எதிராக அதிரடியாகத்தான் துடுப்பாடுவேன். அக்தரும் இதற்கு விதிவிலக்கல்ல. பாகிஸ்தானுக்கு எதிரான போட்டிகளில் சற்று கூடுதல் நெருக்கடி இருக்கும்.

எதிரணியை பற்றி கவலைப்படாமல் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் நன்றாக ஆடினோம். இருபது-20 போட்டியில் அவர்களை வீழ்த்தியது நம்பிக்கை அளிக்கிறது. நெருக்கடியான தருணங்கள் எனது முழு திறமை வெளிப்படுத்த உதவுகின்றன. இவ்வாறு உத்தப்பா தெரிவித்தார்.

இருபது -20 உலக கோப்பை தொடரில் அசத்திய வேகப்பந்து வீச்சாளர் ஆர்.பி.சிங் பாகிஸ்தானை சந்திக்க தயாராகி வருகிறார். இவர் கூறுகையில், அடிப்படை விஷயங்களில் கவனம் செலுத்தி வருகிறேன். இரு அணிகளும் சம பலத்துடன் உள்ளதால் இத் தொடர் விறு விறுப்பாக இருக்கும். சோயப் அக்தரை சமாளிக்கக்கூடிய துடுப்பாட்ட வீரர்கள் இந்திய அணியில் உள்ளனர். எதிரணி வீரர்கள் ஓட்டங்கள் குவிப்பதை கட்டுப்படுத்த திட்டங்கள் தீட்டியுள்ளேன். இன்சமாம் ஓய்வு பெற்றது பாகிஸ்தானுக்கு பின்னடைவு. இதனால் மிடில்-ஆர்டர் வீரர் கள் மீது கூடுதல் சுமை உள்ளது என்றார்.

மீண்டும் இந்திய அணியில் வாய்ப்பு கிடைக்கும் என தமிழக வீரர் தினேஷ் கார்த்திக் தெரிவித்துள்ளார். இவர் கூறுகையில் "அணியிலிருந்து நீக்கப்படுவது சகஜமான ஒன்று இடம் அளிப்பது தேர்வாளர்களின் பணி. எனது குறிக்கோள் 'போட்டிகளில் சிறப்பாக ஆடுவது மட்டுமே. எனது பலவீனங்களை

## விளையாட்டுச் செய்திகள்

களைய கடும் பயிற்சிகள் மேற்கொண்டுள்ளேன்.

உடற்தகுதி, களத்தடுப்பில் அனைத்து வீரர்களும் மிகுந்தகவனம் செலுத்தி வருகின்றனர். எந்த நிலையிலும் என்னால் துடுப்பாட முடியும். எனது கவனம் தற்போது ரஞ்சி போட்டிகளில் உள்ளது. மீண்டும் தேசிய அணியில் வாய்ப்பு கிடைக்கும்" என்றார். (அ-5)

# உலகக் கோப்பை கால்பந்து போட்டி 2014ஆம் ஆண்டு பிரேசிலில்

(சுவிட்சர்லாந்து)

ஜுரிச் சுவிட்சர்லாந்து 2014 உலகக் கோப்பை கால்பந்து போட்டியை பிரேசிலில் நடந்த சர்வதேச கால்பந்து சம்மேளனம் ஒப்புதல் அளித்துள்ளது. 1950க்குப் பிறகு பிரேசிலுக்கு இந்த வாய்ப்பு கிட்டியுள்ளது.

சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் செயற்குழுக் கூட்டத்தில் 2014 போட்டியை பிரேசிலில் நடந்த ஒருமனதாக முடிபு செய்யப்பட்டது. உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் 5முறை பட்டம் வென்ற ஒரே நாடு பிரேசில் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-5)

# விவசாயிகளுக்கு 2ஆம் கட்ட மானியவிலை உரம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு 2ஆம் கட்டமாக கமநல சேவை நிலையங்கள் ஊடாக மானிய விலையில் உரப்பசளை வழங்கப்பட்டு வருகிறது. நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மஹிந்த சிந்தனையின் கீழ் மானிய விலையில் உரப்பசளை மூன்று கட்டங்களாக வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முதலாம் கட்ட விநியோகம் நெல்விதைக்கும் போது வழங்கப்பட்டது. இரண்டாம் கட்ட விநியோகம் தற்பொழுது நடைபெறுகிறது. தற்பொழுது நெல்வயல்களுக்கான அடிக்கட்டு பசளையாக ரி.டீ.எம். கலவையாக உரப்ப சளை பயன்படுத்துவதற்குரிய கலவை உரம் வழங்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 13 கமநல சேவை நிலையங்கள் ஊடாகவும் உரப்பசளை விநியோகம் நடைபெற்றுவருகின்றது. தற்பொழுது வழங்கப்படும் உரப்பசளை 1 ஏக்கருக்கு 35 கிலோ யூரியா 10 கிலோ எம்.ஓ.பி. உரப்பசளை வழங்கப்படுகிறது.

மூன்றாம் கட்ட பசளை விநி யோக நெல் பயிர்ச்செய்கை வரும் காலப்பகுதியில் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உரப்பசளை விநியோகம் தொடர்பாக கமநல சேவை நிலையங்களுக்கு பொறுப்பான பெரும்பாக உத்தியோகத்தர் கருத்துத் தெரிவிக்கையில்,

நெற்பயிர்ச் செய்கையில், ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு ஒரே தடவையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட முழு உரப்பசளைகளையும் வழங்குவதன் மூலம் உரப்பசளைகளை பயன்பாட்டில் ஒழுங்கு இல்லாமல் போய் விடும் என்பதை கருத்தில்கொண்டு மூன்று கட்டங்களாக உரவிநியோகம் நடைபெறுவதாகவும் கட்டம் கட்டமாக உரப்பசளை உரிய அளவு ரீதியாக வழங்கப்படுவதால் பொருத்தமான வழிப்படுத்தலும் உரிய காலப்பகுதியில் உரப்பசளைகள் நெற்பயிருக்கு பயன்படுத்தப்படுகின்ற நிலை ஏற்படும். விவசாயிகள் குறிப் பிட்ட விடயம் தொடர்பாக அறிவுசார் நிலையில் உரப்பசளை வகைகளை பயன்படுத்த முடியும் எனத் தெரிவித்தார். (அ-5)

# குறுகிய அரசியல் நோக்கங்களை விடுத்து நாட்டை நேசிப்போரே நமக்கு தேவை

(கொழும்பு)

**பிரதமர் ரத்னசிறி விக்ரமநாயக்க**

பயங்கரவாதிகளுக்கும், அவர்களுக்கு உதவி செய்வோருக்கும் இந்த நாட்டில் இடமளிக்கக் கூடாது. நாட்டில் தற்போது நிலவும் பிரச்சினைக்கு அரசாங்கம் முகம் கொடுக்க தயாராகவே இருக்கிறது. குறுகிய அரசியல் நோக்கங்களை விடுத்து நாட்டின் நலனுக்கு முன்னுரிமை கொடுத்து செயற்பட அனைவரும் முன்வர வேண்டும் என்று பிரதம மந்திரி ரத்னசிறி விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 83 ஆவது உலக சிக்கன தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு பிரதமர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் வெளிநாடுகளிடமிருந்து நாட்டின் தேவைக்காகக் கடன்பெற முயற்சிக்கும் போது, அதைத் தடுப்பதற்கு முயற்சிப்போர் நாட்டின் நலனை கருத்திற்கொண்டு செயற்படுபவர்களா? என்பதை சிந்திக்க வேண்டும் நமது நாட்டைப் பாதுகாப்பதில் முப்படையினரும் தியாக சிந்தையுடன் சேவையாற்றுகின்றனர். அவர்கள் கௌரவிக்கப்படவேண்டியவர்களே. இலங்கை நமது நாடு எந்தத் தரப்பு ஆட்சிசெய்கிறது என்பதை முக்கியப்படுத்தாமல் எமது நாட்டை நாம் மனதார நேசிக்க வேண்டும்.

பயங்கரவாதத்துக்கும் அவர்களின் கொடூரங்களுக்கும் இங்கு இடமில்லை. அதே போலவே வெளிநாடுகளின் அட்டவணைகளுக்கும்,நிகழ்ச்சி நிரல்களுக்கும் கூட இங்கு இடமளிக்கப்படமாட்டாது. நாட்டை நேசிப்போரே நமக்குதேவை. நமது நாடும் அபிவி ருத்திகாண வேண்டும். இது நமது நாடு என்பதை எப்போதும் நினைவில் வைத்திருங்கள் என்று பிரதமர் அங்கு மேலும் தெரிவித்தார். (அ-5)

# ஜி.ரி.இசற் அனுசரணையில் பயிற்சிப் பட்டறை

ஜி.ரி.இசற் நிறுவனத்தின் அனுசரணையுடன் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களமும் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களமும் இணைந்து நடாத்தும் கடற்றொழில் கூட்டுறவுச் சங்க நிர்வாக உறுப் பினர் களுக்கான பயிற்சிப்பட்டறை கடந்த 3ஆம் திகதி முதல் மாவட்டத்தின் பல இடங்களில் நடைபெற்று வருகின்றது. இதன் ஆரம்ப நிகழ்வு கடற்றொழில் திணைக்களத்தின் கலந்துரையாடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் ஜீ.ரி.இசற் நிறுவனத் தின் அணித் தலைவர் இராசிங் கம், கடற்றொழில் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் கூட்டுறவு அபிவிருத்திதிணைக்களத்தின் உதவி ஆணையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். இப் பயிற்சியின் மூலம் 100 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை சேர்ந்த 300 பணியாளர்கள் பயனடையவுள்ளார்கள். (அ)

# வீதிகள் செப்பனிடப்படாமையால் மக்களும், மாணவர்களும் அவதி

நியாப் திட்டப் பணிப்பாளர், உள்ளூராட்சி திணைக்கள உதவி ஆணையாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை செயலாளர்,வட்டு தெற்கு கிராம செயலாளர் உள்ளூராட்சி திணைக்கள பொறியியலாளர், பிரதேசசபை தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், வீதி ஒப்பந்தக்காரர் அனைவரும் வட்டுக்கோட்டை வட்டு தெற்கில் வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகளான கார்த்திகேய வித்தியாசாலை வீதி, செம்பாட்டான் தோட்ட வீதி, நாவலடி வீதி ஆகிய வீதிகளை கிரவல் வீதிகளாக சிறந்த முறையில் செய்வதாகவும் கார்த்திகேய வித்தியாலய வீதியில் 350மீற்றர் மேல் தார் வீதியாக மாற்றி தருவது எனவும் பொது மக்களின் முன்னிலையில் கடந்த ஆறு மாதங்களிற்கு முன் உறுதியளித்திருந்த போதும் இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் இதனால் பொது மக்களும் இரு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும் மிகவும் சிரமத்தை எதிர் நோக்கியுள்ளனர். வட்டு. தெற்கு மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (அ)

> பூமியில் குடிசை கட்டுவதற்கு சக்தியற்ற பலர் ஆகாயத்தில் அநேக அரண்மனைகளைக் கட்டிக் கொண்டிருக்கின்றனர்.
>
> - வேல்ஸ்

வலம்புரி

## அறிவிக்கப்பட்ட விலையில் பொருட்கள் விற்பனை செய்யப்படுமா?

யாழ்ப்பாணத்திற்கு கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ள பொருட்கள் விற்பனை செய்யப்பட வேண்டிய விலை விபரம் யாழ். அரச அதிபரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரினால் விலை நிர்ணயம் செய்யப்பட்டதன் அடிப்படையில் யாழ். அரச அதிபரினால் பிரஸ்தாப விலைப்பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது.

என்னும் அரச அதிபரினால் அறிவிக்கப்பட்ட விலைப்பட்டியலின் அடிப்படையில் பொருட்கள் விற்பனை செய்யப்படுமா? என்ற கேள்வி பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ளது. அதைவிட, கப்பலில் வந்த பொருட்கள் தனியார் வர்த்தகர்களுக்கே உரியதாக இருப்பதால், அவர்கள் பங்கீட்டு முறை எதனையும் பின்பற்றாமல் விற்பனை செய்வர்.

எனவே பங்கீட்டு அடிப்படையிலன்றி தனியார் வர்த்தகர்களினால் விற்பனை செய்யப்படும்போது அதனை எவரும் மேற்பார்வை செய்வதற்கான வாய்ப்புகள் இல்லை.

எனவே, கப்பலில் வந்த பொருட்களை அறிவிக்கப்பட்ட விலையின் அடிப்படையில் கொள்வனவு செய்வதற்காக நுகர்வோர் வர்த்தக நிலையங்களுக்குச் சென்றால் பொருள் கிடையாது. மாறாக பொருள் முடிந்து விட்டது என்பதே பதிலாகக் கிடைக்கும்.

இந்தப் பதில் ஒரு சில தினங்களில் முற்றுப்பெற்று மீண்டும் பொருட்கள் காட்சி தரும். அவை உயர்ந்த விலையைக் கொண்டவையாக இருக்கும். நுகர்வோர் ஏதேனும் கேள்வி எழுப்பினால் இவை எம்.வி அல்மேசன் கப்பலில் வந்த பொருட்கள் அல்ல. இது இன்னொரு கப்பலில் வந்தவை என்று கூறப்பட்டு அதிகூடிய விலைக்கு விற்கப்படும். இதுவே யாழ்ப்பாணத்து வழமை நிலை.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் பால்மாவின் விலையை அரசாங்கம் அதிகரித்த போது யாழ்ப்பாணத்து வர்த்தக நிலையங்களில் இருந்த பால்மாப் பக்கற்றுக்கள் திடீரென மறைந்து போயின.

கூடவே, யாழ்ப்பாணத்தில் பால்மாப் பக்கற்றுக்களுக்கு விலை அதிகரிக்கவில்லை என யாழ். அரச அதிபர் விடுத்த அறிக்கையினால் ஒன்று இரண்டு பைக்கற்றுக்களும் மறைக்கப்படும் அறைக்குச் சென்று விட்டன. இந்நிலையில், அறிவிக்கப்பட்ட விலைப்பட்டியலின் அடிப்படையில் பொருட்கள் விநியோகிக்கப்படுமென எதிர்பார்ப்பது முடியாத காரியம்.

ஆக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினூடாக பங்கீட்டு அடிப்படையில் பொருட்களை விநியோகித்தால் மட்டுமே கட்டுப்பாட்டு விலையில் பொருட்கள் பொது மக்களைச் சென்றடையும் இல்லையேல் விலைப்பட்டியல் எல்லாம் தேவையற்றதாகிவிடும்.

# அநுராதபுர மோதலில் அரசுக்கு இன்னிங்ஸில் தோல்வி என்கிறார்

### அமைச்சர் மஹிந்த அமரவீர

வடக்கு -கிழக்கில் கிரிக்கெற் போட்டியொன்றை விளையாடும் அரசாங்கத்திற்கு அநுராதபுரம் விமானப்படைத் தளம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் பாரிய தோல்வியாகும் என்று நீர் வழங்கல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு கிரிக்கெற் போட்டியில் ஐந்து அல்லது ஆறு இன்னிங்ஸ்கள் உள்ளன. அதில் ஒன்றான அநுராதபுரம் மோதலில் ஒரு இன்னிங்ஸ் தோற்றுவிட்டோம். இந்நிலையில் படையினரை ஊக்குவிக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஹுங்கம விஜயபா மத்திய கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கரப்பந்தாட்ட விளையாட்டு மைதானத்தை கடந்த திங்கட்கிழமை திறந்து வைத்துப் பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் இங்கு மேலும் கூறியுள்ளதாவது,

அநுராதபுரம் விமானப் படைத்தளம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் அரசுக்கு ஏற்பட்டுள்ள பாரிய தோல்வியாகும் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். எதிர்வரும் காலங்களிலும் இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெறலாம் இவ்வேளைகளில் பின்னடைவுகள் ஏற்பட்டாலும் படையினரை தைரியப்படுத்த வேண்டும். இது மக்கள் முன்னுள்ள பாரிய பொறுப்பாகும்.

படையினரை ஊக்குவிப்பதில் நாம் எப்போதும் பின்னிற்கக்கூடாது. வடக்கு, கிழக்கில் போட்டியொன்றை நடத்தும் அரசாங்கத்திற்கு சில இன்னிங்ஸில் தோல்வி வரலாம். அதற்காக பின்னிற்க முடியாது. அனைத்துக்கும் முகம் கொடுக்க தயாராகவிருக்க வேண்டும். (அ-5)

# அநுராதபுர தாக்குதலில் பலியான 21 கரும்புலிகளின் நினைவஞ்சலி கூட்டத்திற்கு நோர்வே அரசு அனுமதி

(கொழும்பு)

அநுராதபுர விமானப் படைத்தள தாக்குதலின் போது பலியான 21 கரும்புலிகளின் நினைவு- அஞ்சலிக் கூட்டத்தை நடத்துவதற்கு நோர்வே அரசு அனுமதியளித்துள்ளது.

நோர்வே தலைநகரான ஒஸ்லோவில் கடந்த 26 ஆம் திகதி விடுதலைப் புலிகளோடு தொடர்புடைய தமிழ் இயக்கமொன்றின் காரியாலயத்திலேயே இந்த அஞ்சலிக்கூட்டம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி கரும்புலிகளின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் நோர்வே நாட்டிலுள்ள தமிழ் இளைஞர், யுவதிகளும் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் புலிகளுக்கு சார்பான நிதி உதவியாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

நோர்வேயைத் தவிர டென்மார்க் ஹெர்ல்ஸ்டேமோ மற்றும் ஸ்டூவர் நகரங்களிலும் பலியாகிய கரும்புலிகளுக்கான நினைவஞ்சலிக்கூட்டங்கள் அனுஷ்டிக்கப்பட்டுள்ளன.

நோர்வே அரசினால் விடுதலைப் புலிகளின் இயக்கம் பயங்கரவாத இயக்கம் அல்ல என தீர்மானிக்கப்பட்டதன் பின்பே இந்த நினைவஞ்சலிக் கூட்டம் அனுஷ்டிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-5)

# வடக்கு-கிழக்கில் தேர்தல் நடத்த தயார்

### தேர்தல் திணைக்களம் தெரிவிப்பு

இலங்கையில் தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் வடக்கு -கிழக்குப் பகுதியில் தேர்தல் நடத்த தயாராக இருப்பதாக் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிழக்கில் 16 பிரதேச சபைகள், 2 நகர சபைகள், 2 மாநகர சபைகள்; வடக்கில் 5 நகர சபைகள், ஒரு மாநகர சபை, 27 பிரதேச சபைகளுக்கான தேர்தலை பாதுகாப்புக் காரணங்களைக் காரணம் காட்டி அரசாங்கம் ஒத்தி வைத்திருந்தது.

வடக்கு கிழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களையும் சிறப்புச் சட்டம் மூலம் அரசாங்கம் இரத்துச் செய்தது.

இந்நிலையில் வடக்கு கிழக்கில் தேர்தல் நடத்துவதற்கான முட்டுக்கட்டைகள் நீக்கப்பட்டுள்ளன. தேர்தலை நடத்த தேர்தல் திணைக்களம் தயாராக உள்ளது. மாகாண சபைகள் சட்டத்தின் கீழ் தேர்தல் நாட்களை அமைச்சர் முடிவு செய்வார் என்று தேர்தல் திணைக்கள பிரதி ஆணையாளர் பி.எம் .சிறீவர்த்தன தெரிவித்துள்ளார்.

2006ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலைப் பயன்படுத்தி இத்தேர்தலை நடத்தப் போவதாகவும் சிறீவர்த்தன கூறியுள்ளார். இருப்பினும் வடக்கு கிழக்கில் தேர்தல் நடத்துவது சாத்தியமற்றது என்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு எதிர்த்து வருகிறது.

# ஆஸ்துமா நோய் பற்றிய கருத்தரங்கும் நூல் வெளியீடும்

எப்படிக் கட்டுப்படுத்தலாம்?

1.தீவிரப்படுத்தும் காரணியைக் கண்டறிந்து தவிர்த்துக்கொள்ளுதல்

2.சரியான முறையில் வைத்தியரின் ஆலோசனைப்படி மருந்துகளைப் பாவித்தல்

முன்னைய காலங்களில் மருந்து வகைகள் மாத்திரைகளாகவே வழங்கப்பட்டன. ஆனால் தற்போது ஆஸ்துமாவிற்கான மருந்துகள் Inhaler (சுவாசத்தின் மூலம் உறிஞ்சி எடுக்கும் முறை) மூலமாக வழங்கப்படுகின்றன, இதற்கான காரணம் என்ன?

நாம் குளிசைகளைப் பாவிக்கும் போது அது குடலினால் அகத்துறிஞ்சப்பட்டுப் பின்னர் குருதி மூலம் உடலின் எல்லாப் பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றன. அந்த மருந்தின் ஒரு சிறு பகுதியே மருந்து தேவைப்படும் இடமான சுவாசக் குழாயினுட் செல்கின்றது. குருதி மூலம் மற்றைய உடலுறுப்புக்களுக்குக் கொண்டு செல்லப்படும் மருந்து உடலிலே பலபக்க விளைவுகளை ஏற்படுத்துகின்றது.

- உதாரணம்

| *சல்பியூட்மோல் (Salbutamol)* | *பிரிட்னிசிலோன் (Prednisolone)* |
|---|---|
| ♦ இருதயம் வேகமாக அடித்தல் | ♦ சலரோகம் |
| ♦ கைநடுக்கம் | ♦ உடல் பருமனடைதல் |
| ♦ தசைப்பிடிப்பு - | ♦ எலும்புத் தேய்வு |
| | ♦ சிறுவர்களின் வளர்ச்சி பாதிப்பு |

மேற்படி மருந்தினை Inhaler (மூச்சு வாங்கி) மூலம் பாவிக்கும் போது மிகவும் சொற்பமான மருந்தே பாவிக்கப்படுகிறது. இது நேரடியாக வாயில் வைத்து சுவாசக்குழாய்க்குள் உறிஞ்சப்படுவதால் தேவையான மருந்து நேரடியாகச் சென்றடைகிறது. அத்துடன் இரத்தத்திற் கலக்கும் மருந்தின் அளவு மிக மிகக் குறைவாக இருக்கின்றது. இதனாற் பக்க விளைவுகள் மிகக் குறைவு

| Salbutamol Inhaler | Steroid Inhaler |
|---|---|
| 1.மிகவும் விரைவாக சுவாசக் குழாயை விரிவடையச் செய்யும் | பக்கவிளைவு மிகவும் குறைவு |
| 2)பக்க விளைவு மிகவும் குறைவு | |

ஆஸ்துமா பற்றிய மேலதிகத் தகவல்களைப் பெறுவதற்கும் உங்களுடைய ஆஸ்துமா நோய்பற்றி யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களிடம் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும்அழைக்கின்றோம்.

இடம்:-யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபம்

காலம்:-04.11.2007 (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 9மணிக்கு

நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் : சமுதாய மருத்துவத்துறை, மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம். (தொடரும்)

# வெள்ளி நற்சிந்தனை 41

## நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி

### கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

பண்டைக்காலம் தொட்டே ஆண்களின் ஒழுக்கச்சீர்கேடு பற்றி இலக்கிய பதிவுகள் உள்ளன. சங்கப் பாடல்களில் மருதப் பாடல்களென வகைப்படுத்தப்பட்ட பரத்தமை ஒழுக்கம் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. சிலம்பு என்னும் முத்தமிழ் காப்பியம் விலைமகள் உறவால் ஒரு வீடு மட்டும் அல்ல, ஒரு நாடே அவலத்திற்குள்ளானதைப் பதிவு செய்துள்ளது. ஆண்மகனின் செல்வச்செருக்கு அவனை விலை மாதருடன் உறவு கொள்ள வைத்தது.

திருமணம் முடித்து மனைவியோடு குடும்பம் நடத்தும் ஆடவன் ஆடல் மகளிரின் இருப்பிடம் சென்று பொருள் கொடுத்து இன்பம் துய்ப்பதற்கு சமூகம் அங்கீகாரம் வழங்கியிருந்தது. பரத்தமை உறவால் குடும்ப வாழ்க்கை சிதைவதைப்பற்றி ஆண்கள் கவலைப்படவில்லை. கட்டிய மனைவியை பெற்றெடுத்த மக்கட்செல்வங்களையும் மறந்துவாழ முற்பட்டனர். தமது இன்ப வாழ்வு ஒன்றையே கருத்திற்கொண்டிருந்தனர்.

இத்தகைய நிலையில் அறநீதி நூல்கள் தோன்றி பரத்தமை ஒழுக்கத்தை நீக்க மக்களுக்கு அறிவுரைகளை வழங்கின. திருக்குறள் ‘வரைவின் மகளிர்’ என்னும் பகுதியில் பரத்தமை பற்றிய செய்திகளை தொகுத்துக் கூறியுள்ளது. பொருளை விரும்பும் பொதுமகளிரை தழுவுதல் பொய்யானது. இருட்டறையிலே ஒரு பிணத்தை தழுவுவதற்கு ஒப்பானது என வள்ளுவர் இழித்துக் கூறியுள்ளார்.

ஔவையார் பிற பெண்களை நாடிச்செல்லும் ஆண்களை பிறிதொரு வகையில் ஆற்றுப்படுத்துகிறார். இயற்கை நிலையிலே சிலவற்றின் அழிவுக்கு அவற்றின் கருவே காரணமாக அமைவதை எடுத்துக்காட்டி அதுபோலவே ஆண்களின் பரத்தமையால் அவர்களுக்கு ஏற்படும் அழிவுகளைச் சுட்டிக்காட்டுகிறார். நண்டு, சிப்பி, மூங்கில், வாழை என்பன தாம் அழியும் காலத்தில் உள்ளே கொண்ட கருக்களை ஈனும் தன்மையுடையன. அதுபோலவே ஆண்கள் தம்முடைய ஞானம், செல்வம், வித்தை என்பன அழியும் காலத்திலே பிற பெண்கள் மீது தகாத ஆசை கொள்வார்கள் என ஔவையார் தனது பாடலில் பதிவு செய்து வைத்துள்ளார். பிற பெண்கள் மேல் ஆசை கொள்ளும் ஆண்கள் தம் நிலையை மறந்து செயற்படுவதால் பொய், களவு, காமம் போன்ற பாவச்செயல்களிலேயே கூசாமல் ஈடுபடுவர். அவ்வேளையில் தம்முடைய கல்வி அறிவையோ ஞானத்தையோ பயன்படுத்தாமல் மனக்கட்டுப்பாடின்றி நடப்பர். தம்முடைய செல்வம் முழுவதையும் கூட இழந்துவிடுவர். இந்நிலை சமூகத்தின் கட்டுக்கோப்பை குலைக்கும் .

இக்கருத்தை ஔவையார் பெண்ணை அழைத்துக் கூறுவது போல் பாடலிலே அமைத்துள்ளார். நான்கடிப் பாடலில் அறிவுரையாக அமைந்துள்ளது

“நண்டு சிப்பி வேய் கதலி நாசமுறும் காலத்தில்
கொண்ட கரு அளிக்கும் கொள்கைபோல்-ஒண்தொடி
போதம் தனம் கல்வி போன்ற வரும் காலம் அயல்
மாதர் மேல் வைப்பார் மனம்” (நல்வழி: 36)

# அரசியல் வழித் தீர்வு காண அரசாங்கம் முன்வரவேண்டும்

## உலக வங்கி வலியுறுத்தல்

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் வழியில் தீர்வு காண்பது அவசியமானது என்று உலக வங்கியின் முகாமையாளர் கிரேமி வீலெர் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் நேற்று வியாழக்கிழமை அவர் பேசியதாவது, இலங்கை இனப்பிரச்சினையானது இலங்கை மக்கள் மீதும் நாட்டின் பொருளாதாரத்தின் மீதும் பாரிய சுமையை சுமத்தியுள்ளது.

மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப முயற்சிக்கும்போது சவால்களுக்கு அவர்கள் முகம் கொடுப்பது குறித்து வருத்தமடைகிறேன். பெருந்தொகையான கடத்தல்கள், படுகொலைகள், காணாமல்போதல்கள் மற்றும் சட்டத்தின் ஆட்சி சீர்குலைவு குறித்த ஐ.நாவின் லூயிஸ் ஆர்பரின் கவலையை எதிரொலிக்கும் குரல்களை நாம் கேட்டோம்.

உலக வங்கியால் செயற்படுத்தப்படும் திட்டங்களை இன ஒதுக்கல், பாரபட்சமாக அணுகுதல் ஆகியவற்றை ஆகக் கூடுமானவரைக்கும் குறைத்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இலங்கையின் அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக சிறந்த எதிர்காலத்தைப் பெறவேண்டும் என்பதை இலக்காகக் கொள்ள வேண்டும்.

இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதிகள் பொருளாதார வளர்ச்சியிலிருந்து விலகி நிற்பதை நாம் ஒப்புக்கொள்கின்றோம். கிழக்கின் தற்போதைய நிலைமைகளின் அடிப்படையில் அங்கு அபிவிருத்தித் திட்டப் பணிகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பம் உருவாகியுள்ளது.

கிழக்கு மற்றும் மோதலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உதவிகளை வழங்க உலக வங்கி உறுதியாக உள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு விரைவில் அரசியல் வழியிலான தீர்வு காணப்படவேண்டும் என்று நாம் வலியுறுத்துகிறோம் என்றார் அவர். (ச-5)

# கடத்தப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டோரின் பெயர் விபரங்களை வெளியிடவேண்டும்

## மனோகணேசன் எம்.பி. வலியுறுத்தல்

இலங்கையில் கடத்தப்பட்டோர் பலரும் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டதாக தெரிவித்துள்ள மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அவர்களின் பெயர்களையும் வெளியிடவேண்டும் என்று மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மனோகணேசன் கூறியதாவது;குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் தலைவருக்கு கடத்தப்பட்டோரின் விபரங்களை நாம் அனுப்புகின்றோம். அவர்களில் வீடு திரும்பியோர் அல்லது வெளிநாடு திரும்பியோரின் பட்டியலை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் பகிரங்கப்படுத்தவேண்டும்.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவிடம் நேரிலும் பொலிஸ் ஆணையகத்தின் தலைவருக்கு அஞ்சல் மூலமும் கடத்தப்பட்டோரின் விபரங்களை நாம் அனுப்பினோம். அதே போல் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திற்கும் அனுப்பினோம். கடந்த ஓகஸ்ட் மாதம் இந்த விபரங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

இந்த விபரங்களை பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பிவைப்பதாக பிரதமரும் பொலிஸ் ஆணையாளரும் தெரிவித்தனர். பிரதமர் கூறியதுபோல் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பியிருந்தால் அதில் கண்டுபிடிக்கப்பட்டோரின் விபரங்களை வெளியிடவேண்டும்.

இலங்கையில் சித்திரவதைகள் தொடர்பாக ஐ.நாவின் சிறப்புப்பிரதிநிதி மன்பிரெட் நோவாக் தெரிவித்துள்ள கருத்துக்களை நாம் வரவேற்கின்றோம். அவசரகாலச் சட்டங்களின் கீழ் பொலிஸாரின் தடுப்புக்காவலில் சித்திரவதைகள் மேற்கொள்ளப்படுவதை தடுக்க வலுவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சிறைச்சாலைத் திணைக்களம் நடைமுறைகளில் மறுசீரமைத்து மேற் கொள்ளப்பட வேண்டும் என்பது போன்ற பரிந்துரைகளை நாம் முழுமையாக வரவேற்கின்றோம்.

மேலும் கடத்தப்பட்டோரின் குடும்பத்தினரை சந்தித்து விட்டுச் சென்ற ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையாளர் லூயிஸ் ஆர்பரின் பதிலை இம் மாதத்தின் பிற்பகுதியில் நாம் எதிர்பார்த்திருக்கின்றோம் என்றார் மனோகணேசன். (ச-5)

# ஊடகங்கள்...

அமைதிக்கு பங்கம் ஏற்படக் கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டது.

இவ்வாறான நிலை மீண்டும் ஏற்படுவதை தடுக்கும் நோக்குடனேயே பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின்விதிமுறைகளுக்குஅமையவே வர்த்தமானிமூலம் தணிக்கைச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

ஊடகங்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். தகவல்கள் உறுதி செய்யப்பட்ட பின்னரே செய்தி வெளியிடப்படவேண்டும். கடந்த சில தினங்களாக ஊடகங்கள் பொறுப்புணர்ந்து செயற்படுவதை காணக்கூடியதாக இருப்பதால் இந்த தணிக்கை உத்தரவை வாபஸ் பெறுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டார். அந்த அடிப்படையிலேயே தணிக்கைச்சட்டம் இன்று முதல் நீக்கப்படுகிறது.

எனினும் உண்மைத் தகவல்களை மட்டுமே வெளியிடுமாறு சகல ஊடகங்களையும் கேட்டுக்கொள்கின்றேன் என அமைச்சர் மேலும் கூறினார். எமது அரசாங்கத்தின் செயல் திட்டங்களை பொதுமக்களின் பெரும்பான்மையினர் அங்கீகரித்துள்ளனர் என்பது அரசாங்கம் மாவட்ட ரீதியில் மேற்கொண்ட ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் அநுரபிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

நாட்டு மக்களை பிழையாக வழிநடத்த எதிர்க்கட்சியினர் பகீரதப்பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர். ஐ.தே.க. உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல அரசுக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். அதாவது, ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பிரதமராக இருந்தபோது நிறைவேற்று அதிகாரம் இல்லாமலேயே சமாதானத்தை உருவாக்கினார். யுத்தத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார், நாட்டின் பொருளாதாரத்தை மேம்படச் செய்தார், சர்வதேச நல்லவிப்பிராயத்தைப் பெற்றார். ஆனால் இன்றைய அரசு யுத்தத்தை முன்னெடுத்து மக்களை ஏமாற்றுகிறது என்று குற்றஞ்சுமத்தியுள்ளார். இவை அனைத்தும் அப்பட்டமான பொய்களாகும்.

ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது உண்மை. ஆனால் சமாதானம் வரவில்லை. சுமார் ஒன்றரை வருடகாலமாக புலிகள் சமாதானப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளவில்லை. அக்காலப் பகுதியில் அவர்கள் ஆயுதங்களைக் கொண்டுவந்து குவித்தார்கள். விமானங்களைக் கொள்வனவு செய்தார்கள். கொழும்புக்கு வந்து எமது புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளை படுகொலைசெய்தனர்.

ஆனால் இன்று ஐ.தே.கவினர் பொய்க் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து மக்களை தவறான வழியில் இட்டுச் செல்ல முயற்சிக்கின்றனர். அவர்களின் எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது. ஏனெனில் மக்கள் எமது அரசின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனர் என்பது அரசாங்கம் மாவட்ட ரீதியில் மேற்கொண்ட ஆய்வுகளில் இருந்து தெரிய வந்துள்ளது. எனவே பயங்கரவாதத்தை அழிக்கும் நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என்றும் அமைச்சர் கூறினார். (ச-5)

# வேலையற்ற...

தாக்குதலில் 12 பட்டதாரிகள் காயமடைந்தனர். இந்த அரசாங்கம் பட்டதாரிகளுக்கு பொய் வாக்குறுதிகளை வழங்குகிறது என்றும் இத்தகைய போராட்டங்களை அராஜக முறையில் அடக்க முனைகிறது என்றும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மாணவர்கள் தெரிவித்தனர். மேலும் தமது போராட்டம் தொடரும் என்றும் பட்டதாரிகள் எச்சரித்துள்ளனர். (ச-5)

# மன்னாரிலும் முகமாலையிலும்...

# 30 புலிகள் பலி- இராணுவம்...

மன்னார் முன்னரங்க நிலைகளில் நேற்று விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையே மோதல் இடம் பெற்றுள்ளது. மன்னார் பெரிய குளக்கட்டுப் பகுதியின் வட மேற்கே உள்ள முன்னரங்க நிலைகளில் இம் மோதல் ஏற்பட்டது.

இம்மோதலின் பின் தேடுதல் மேற் கொண்ட இராணுவத்தினர் ஆறு விடுதலைப் புலி உறுப்பினர்களின் சடலங்களை மீட்டதாகவும் இதில் 12 இராணுவத்தினர் காயமடைந்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. காயமடைந்த இராணுவ வீரர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை யாழ்ப்பாணம் முகமாலை முன்னரங்க நிலைகளில் நேற்று அதிகாலை 3 மணியளவில் விடுதலைப்புலிகள் தொடுத்த தாக்குதலை இராணுவத்தினர் முறியடித்துள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இம்மோதலில் விடுதலைப்புலிகளின் நான்கு பதுங்குகுழிகளை இராணுவத்தினர் தாக்கியழித்துள்ளதாகவும் இதன்போது எட்டு விடுதலைப்புலிகள் பலியாகியதுடன் ஐந்து இராணுவ வீரர்கள் படுகாயமடைந்துள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (எ-5)

# 26 இராணுவத்தினர் பலி-புலிகள்...

இவ் இரு தாக்குதல்கள் குறித்தும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளதாவது,

**மன்னார்த் தாக்குதல்**

மன்னாரில் படையினர் மேற்கொண்ட பெருமெடுப்பிலான இரு முனை நகர்வுகளை தமிழீழ விடுதலைப்புலிகள் முறியடித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் தீவிரமான எதிர்த் தாக்குதலில் 25 படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 60 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவரின் சடலம், சுடுகருவிகள், வெடிபொருட்கள் ஆகியன விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மன்னாரின் உயிலங்குளம் பாலைக்குழி மற்றும் கட்டுரைக்குளம் ஆகிய இரு முனைகளில் அதிகாலை 5.15 மணியளவில் படையினர் பாரிய அளவில் முன்னகர்வு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இரு முனைகளில் இருந்து படையினர் செறிவான ஆட்லெறி, பல்குழல் மோட்டார் தாக்குதலை நடத்தியவாறு பாரிய எடுப்பில் இம் முன்னகர்வுகளை மேற்கொண்டனர். பெரும் எண்ணிக்கையிலான படையினர் இந்நகர்வில் ஈடுபடுத்தப்பட்டனர்.

படையினரின் இம்முன்னகர்வுகளை முறியடிக்கும் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் தீவிரமாக மேற்கொண்டனர். நேற்று நண்பகல் 12 மணிவரை நடத்தப்பட்ட விடுதலைப்புலிகளின் தீவிர முறியடிப்புத்தாக்குதலில் படைத்தரப்பின் முன்னகர்வுகள் அனைத்தும் முறியடிக்கப்பட்டுள்ளன.

25க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 60 படையினர் காயமடைந்த நிலையில் அநுராதபுர மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இவர்கள் மன்னார் தள்ளாடிப் படைத்தளத்திலிருந்து உலங்குவானூர்திகள் மூலம் அநுராதபுரம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

படையினர் மன்னாரில் மேற்கொண்ட பாரியளவிலான நடவடிக்கை விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டதில் கொல்லப்பட்ட படையினரில் ஒருவரின் சடலம் மற்றும் சுடுகலன்கள், வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

ரி-56-2 ரக துப்பாக்கிகள் 4, அவற்றுக்குரிய ரவைக்கூடுகள் 32, ஆர்பிஜி எறிகணைகள் 4, ஆர்பிஜி புறப்புலர்கள் 4, பிகே ரவைகள் இணைப்பிகளுடன் 2 ஆயிரத்து 596, ஏகே எல்எம்ஜி ரவைப் பெட்டிகள் 4, ரம் ரவைக்கூடுகள் 4, ரவைத்தடுப்பு அணிகள் 9, ரவைக் கூடு தாங்கி அணிகள் 8, தலைக்கவசங்கள்9, குண்டுகள் 2 ஆகியவற்றினை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

இம் முறியடிப்புத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 7 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர். இம்மோதலின்போது முருங்கனில் வீட்டு முற்றத்தில் நின்ற ஆத்திக்குளியைச் சேர்ந்த இமானுவேல் சுரேந்தினி (வயது 33) மீது முற்பகல் 9 மணியளவில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்துள்ளது.

முருங்கன் மருத்துவமனையிலிருந்து மன்னார் மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக கொண்டு சென்றபோது வழியில் அவர் உயிரிழந்துவிட்டார். அவரது சடலம் மன்னார் மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**முகமாலையில்தாக்குதல்**

முகமாலைப் பகுதியில் படையினர் மேற்கொண்ட முன் நகர்வுத் தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். இதில் படைத் தரப்பைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது.

பெருமளவிலான ஆட்லறி மோட்டார் எறிகணைச் சூட்டாதரவுடன் நேற்று அதிகாலை3 மணியளவில் முகமாலை கண்டல் வெளிப் பகுதிகள் ஊடாக படையினர் பெருமெடுப்பில் முன்னேற முயற்சி மேற்கொண்டனர்.

இம் முன்நகர்வுக்கு எதிராக விடுதலைப் புலிகள் தீவிர எதிர்த் தாக்குதலை நடத்தினர். சுமார் 1.30மணிநேரம் கடும் மோதல் நடை பெற்றது. இதில் படைத் தரப்பைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். பலர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்நிலையில் படையினர் அவர்களின் பழைய நிலைகளுக்கு திரும்பியுள்ளனர். மீண்டும் நேற்று பிற்பகல் 2 மணிக்கு முகமாலை முன்னரங்க நிலைகள் மீது தாக்குதல் நடத்த வந்த படையினர் மீதும் கடும் எதிர்த் தாக்குதலை விடுதலைப்புலிகள் மேற் கொண்டனர்.

இத்தாக்குதல் 30நிமிட நேரம் நடை பெற்றது. இரு சம்பவங்களிலும் விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித இழப்புக்களும் ஏற்படவில்லை என மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-5)







இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.8 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.11.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.